உ


குருவே துணை.

நால்வகைத் தோற்றத்தார் நன்மகாநாடு

அல்லது

# கொலை மறுத்தல்.

OF THE REGISTRAR
No.
5 - JAN 1929
MADRAS



R. N. கல்யாணசுந்தர கவுண்டரால் இயற்றியது.

—0.] 1928.

E LITERARY SUN PRESS. COIMBATORE.

R4
N28
8111

உ

குருவே துணை.

ஆறறிவுடையார்க் கறிவுறுத்திய ஐயறிவுடைய

நால்வகைத் தோற்றத்தார்

நன் மகாநாடு

அல்லது

# கொலை மறுத்தல்.

இஃது

கோ. தா. செட்டிபாளையம்

மகா-ள-ள-ஸ்ரீ ரா. நஞ்சப்பகவுண்டர் குமாரர்

R. N. கல்யாணசுந்தர கவுண்டரால்

இயற்றப்பட்டு

கோயமுத்தூர் வித்தியாபாநு அச்சுயந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1928

# ஆக்கியோனுரை.

இன்னிலவுலகின் கண் மக்களாய்ப் பிறந்தோர் அடையவேண்டியது தருமம், பொருள், காமம், வீடு என்னும் நான்குமே மனித உருவத்தாலாயபயனும்.

இன் நான்கினை படைப்பதற்குத் துணைக் காரணமாய் உள்ளது பொருள், அப்பொருளை நல்லவழியிற் சம்பாதித்து தர்ம விஷயமாய்ச் சிலவுசெய்து அதனல் பெறக்கூடிய இன்பத்தை யனுபவித்து பின்பு முத்திப் பேறடையவேண்டுவதுதான் புருஷார்த்தம் என்பது.

இக்காலத்தில் அதைச்சற்றும் கவனியாது எந்தச் ஜீவன்களையும் கொன்று விற்று அதனல் கிடைக்கும் ஊதியத்தையே பெரிதென மதிக்கிருர்கள்.

ஜீவன்களைக் கொன்று தின்றுபாபத்தை யடைந்து மோக்ஷ வீட்டிற் காளாகாது நிலை தவரிவிடுகிருர்கள். அதைத் தடுக்கும் பொருட்டே இந்நூல் எழுந்தது இதை என் தந்தை தாயார் குரு அவர்களின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்,

R. N. K.

# சிறப்புப்பாயிரம்.

கோயமுத்தூர் ஐக்கோர்ட்டு வக்கீலும் ஜில்லா கல்விச் சங்கத்தின் தலைவரும், ஜில்லா போர்டு, தாலூக்கா போர்டு, முனிசிப்பாலிடி சபைகளின் அங்கத்தவருமாகிய திருவாளர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L., F. M. U. அவர்களின் அபிப்பிராயம்.

இந்நூல் ஜீவகாருண்யம் என்ற பரமதர்மமான கொள்கையை உலகத்தில் பரவச்செய்து நம்நாட்டாரை உஜ்ஜீவிக்கும் மேலான எண்ணத்தைக்கொண்டது.

தற்காலத்தில் நமது கொங்கு நாடு கொலைக்குற்றங்கள் செய்வதில் முதன்மையாய் இருக்கிறது. அரசாங்கத்தார் தங்களால் கூடிய மட்டில் முயற்சித்தும் அக்குற்றங்கள் குறைந்தபாடில்லை. வருடா வருடம் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன அவ்வாறு அதிகரிப்பதன் காரணத்தைக்கண்டு பிடித்து அதற்குண்டான ஔடதத்தைப் பிரயோகித்தால் ஒழிய கொலைக்குற்றம் என்னும் தீராநோய் நம்நாட்டைவிட்டு நீங்காது.

ஒரு தொழிலை எக்காலமும் செய்துகொண்டும் அத்தொழிலையே பார்த்துக்கொண்டும் இருப்பவர்கள் அத்தொழிலைப் போன்றதும் சார்ந்ததுமான ஈனத்தொழில்களைச் செய்யச்சிறிதேனும் அஞ்சார்கள்.

நமது கொங்குநாட்டில் வெள்ளை கோவிலுக்கு அடுத்தாப்போல் இருக்கும் நாட்டுராயன் கோவிலில் வாரந்தோறும் ஆயிரக்கணக்கான ஆடுகள் வதைப்படுவதும்; கொளாநெல்லிக்கருகில் கோட்டை மாரியம்மன் உற்சவத்தில் நூற்றுக்கணக்கான ஆடுகள் பலியிடுவதும்; பொள்ளாச்சி தாலூக்கா சூலக்கல் மாரியம்மன் கோவிலில் நூற்றுக் கணக்காய் ஆடுகள் அறுபடுவதும் கண்ணால் அடிக்கடி பார்த்துவிட்டு மானிடக்கொலை புரிய ஏன் கை அஞ்சுவார்கள்? வாழைத்தண்டு வெட்டி யெறியப்படுவதைப்போல் மனிதரின் கழுத்துக்கள் அறுபடுவது சகஜமாய் விட்டதல்லவா? வருடந்தோறும் 150-க்கு குறையாத தூக்குத்தண்டனை ஏற்பட்டும் ஜனங்கள் கொலைபுரிகிறார்கள்.

இதற்கு காரணம் தினந்தோறும் ஆடுகள் வதைக்கப்பட்டும் அவைகள் ரத்தம் சொரிவதைப் பார்த்துப் பார்த்து பழகிவிட்டதேயாகும். ஆகையால் நமது நாட்டில் மனிதக்கொலை நிறுத்துவதற்குப் பிராணிகளைப் பலியிடுவதை நிறுத்துவதேயாகும்.

தற்காலத்தில் நமது நாடு தாழ்ந்துகொண்டு இருக்கும்போது அதன் ஆதிகாரணமாகிய பிராணிவதையை நீக்குவதற்காக முயற்சி செய்து அதை நாடுமுழுவதும் பரவச்செய்வதான மேல்நோக்கம் கொண்டது இந்நூல்.

இதை உலகத்தார்கள் இனிமையாகப் படித்துச் சுலபமாக அறிந்துகொள்ளும்பொருட்டு ஒரு சபையாக உருவகப்படுத்தி அதில் கொலையாகும் பிராணிகளே தங்கள் எண்ணங்களை எடுத்துரைப்பதாக வருணித்துத் தம் கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்தியும் இருப்பது இந்நூலாசிரியரான R. N. கல்யாணசுந்தர கவுண்டர் அவர்களின் அறிவுயர்ச்சி மிகவும் போற்றத்தக்கது.

இந்நூல் நம்நாட்டிற்கு பெரிதும் பயன்தரும் என்று எண்ணுகிறேன். இதை எல்லோரும் படித்தறிந்து மற்றவர்களுக்குத் தெரிவிப்பது அவரவர்கள் தர்மம்.

C. M. இராமச்சந்திரம் செட்டியார்.
18—1—25.

---

கோ. தா. செட்டிபாளையம் சண்முகஞ் செட்டியார் குமாரர் ஜோதிட வைத்தியம், மருதப்ப செட்டியார் அவர்கள் இயற்றிய

சிறப்புப்பாயிரம், சந்தப்பா.

(1) இசையாதி முதலாகி யிருநாலு மயமாகி யிறைமாய
னமுலாடி யறிவாயத்
திசையாதி யுமையாகி யொருபோது மழியாது திணையாவு
மருளுத லுயர்நாள்
மிசையாதி கலைகூற வழிநூலை நிகமேதை மிகுசீல
குருவோத வரிசீர்
அசையாதி யணிசார்பு பிறராடி யதுபோக வதிநூல்க
ளுலகாய வருமே.

(2) உலகாய வருநூல்க ளொடுபாஷை யறுமூணு முலவாதி
குணநேமி குமரி
அலகாய குடகாழி விடநாக வரைதோணு மதனூடு
திசையேணி களிமேலர்
இலகாய தமிழோசை பெருநீரு ளிவையாவு மிதையாவ
னுடனேதி உணர்வோர்
பலகாய மடையாது பதிபாத முதநாலு பயனுதி
திருநாம முறவே.

(3) திருநாம மணியாறு முகசாமி மொழிதார திசைவேத
மிறைவேத முபமோங்
கிருநாம மனுநீதி மியல்வாணி யொலிநாத மிதிகாச
முதலாய கலையாய்ந்
தொருநாம முருநாளு மொழியாத கொலைபாவ மொழிநூலை
யினிதாய தமிழால்
உருநாம முயரோரைம் பதுநூறு மறுநாலில் உரையாதி
மதியாதி மதனே.

(4) மதியாதி தங்குலக மிசைவாணி செங்கமலை மலிவான
பொன்வணிக நகர்நீ
டுதியாதி கங்கைகுல னெனமேவு நஞ்சணம னுளமாவல்
கொண்டுதவு மகவாம்
புதியாதி சங்கரியை மனவாய்மெய் யன்பினொடு பரவாசை
மிஞ்சுபிர பலவேள்
கதியாதி சங்கமிசை மணிமாதவன் றருமி கலியாண
சுந்தரம னவனே.

---

கோ. தா. செட்டிபாளையம் பிர்மஸ்ரீ ரகுநாத அய்யர் அவர்களால்
இயற்றிய சிறப்புப்பாயிரம்,

## நேரிசை யாசிரியப்பா.

---

சீர்பெறுதவத்திற் சிறப்புளதென்றே
பார்தனிலுள்ளோர் பரிந்துமேற்கொளத்
தொன்னூற்றுணிபின் றுறைவழாஅது
பன்னூற்பகரும் பண்பெலாந்தோன்றத்
தென்னாட்டுள்ளோர் தேர்ந்துநலம்பெற
பாவலரன்றிப் பாமரர்தாமும்
யாவருமுணரச் சொல்லான்யாத்துத்

தக்கோருலகிற்ருஞ் செய்நன்மையின்
மிக்கதோர்நன்மை புரிந்திடவெண்ணி
எல்லாவுயிருங் கைதொழுதிறைஞ்சக்
கொல்லாவரத்தைக் கொலைமறுப்பென்று
பொற்பெயர்தந்து புனைந்தனனெற்குத்
தண்டமிழ் நூலைத்தந்தனன் வணிக
நற்பதிவாழும் நஞ்சப்ப மன்றரு
கந்தனடி தொழுங் கல்யாண
சுந்தரனென்னு மிருங்குணத்தோனே.

## வெண்பா.

நால்வகைத் தோற்றத்தார் நன்மகா நாடெனுநூல்
நால்வகைச் சீவகொலை நன்மறுப்பு—நால்வகைச்
சொல்யாப்பின் தேர்ச்சியினல் சொன்னன் வணிகநகர்க்
கல்யாண சுந்தர மால் கண்டு.

---

கோ. தா சிரவணபுரம் கௌமாரமடாலயம்
ஸ்ரீலஸ்ரீ சுந்தரசுவாமிகள் அவர்கள் அருளிச்செய்தது.

---

கண்ணகல் நிலமிசை புண்ணியம் பொலிதரு
தென்றிசையதனிடை யொன்றியபுகழ்மலி
செட்டிபாளையமெனக் கட்டியர்புகழ்தரும்
பதியினில்வாழ்பவர் நிதிமிகவுடையவர்
மேழிகொண்டுழவுசெய் வேளாண்மரபினர்
ஏழையர்க்குதவுமே ராரழியங்கரத்தினர்
முந்துசெய்தவத்தினல் வந்திகத்துதித்து
நஞ்சப்பனுமமே மிஞ்சப்பொருத்து
தன்னேர்சொற்றவரு நன்மனை தன்னேடு
தென்புலத்தார்முத லைம்புலத்தார்கள்
நல்லனவெனவேயொல்லுமாபுரிந்து
நறுமலர்கொண்டு முருகனைப்போற்றியோர்

புத்திரன் தருகென னத்தினர்பலநா
ளங்நோன்பின்பய னென்னப்பிறந்தோன்
கலியாண சுந்தரன் ஒலிமிகு தந்திரன்
கருணைகொளுளத்தன் றெருள்மிகப்பழுத்தோன்
உயிர்களைக்கோறுதல் செயிர்செயிரென்போன்
மருண்மலியுலகினிலிருண்மலிபுலையரும்
கொன்றுணல்கூடா தென்றுசொல்கருத்தோன்

அதா அன்று

நால்வகைத் தோற்றத்தார் நன்மகா நாடெனும்
நூலொன்றியற்றி நற் காலொன்றுலகினில்
பரவிடவிட்டதின்பண்போ விரவிடத்தக்கவை யதனின்
மேற்கோள்பலவவை சாற்றவும்பெரிதே
யாதலாலிந்த வரிய நூறன்னை
மேதகவினதென மேலவர்கொள்வதோ
டிழிதகையவர்க்கு மெடுத்திசைத்தவர்தம்
பழியகற்றிடுதல் பண்பெனவெனது
குருபரனடியிணை குறிக்கொடுபோற்றி
நிருமலவாழ்விலென் நெஞ்சமைத்தொழுகுவேன்
இந்நூலதனை யிசைத்தவர் கேட்டோர்
செந்நெறிசேரத் திருவருள்புரிக
என்றெடுத்தன்பா விறைவற்பழிச்சுவன்
நன்றவாறளித்தலெங் நாயகன்கடனே.

தெய்வமேதுணை—குருபாதமேகதி.

அக்ஷய-ஹு ஆவணி-மீ 23-௳.

---

கோ. தா. சிரவணபுரம் கௌமாரமடாலயம்

ஸ்ரீலஸ்ரீ கந்தசாமிசுவாமிகள் அவர்கள் அருளிச்செய்த

## அறுசீர் விருத்தம்,

---

மாசுலவுவெங்குணமா மங்கணத்தினங்குழலான் மாக்களெல்லாந்
தேசுலவுவான்முடிதோய் மணிமாடத்திருநகரிற் சேர்ந்துவாழ்வா
னீசுரபத்திபாச விராகம்பிரம ஞானமெனவியல் சோபானத்
தேசுபலத் தேற்றுவிக்குஞ் சீவகருணைப் படிமீதெளிதினூர.

## வெண்பா.

நால்வகைத் தோற்றத்தார் நன்பகாநாடெனுமோ
ரேல்வகைநூ லேணியினிதளித்தான்—சால்வகைய
நல்யாணர்ச் செட்டிநகர் நஞ்சப்ப வேளருளுங்
கல்யாண சுந்தரனுங்கன்.

---

கோயமுத்தூர் ஜில்லா பவானி போர்டு உயர்தரப்பாடசாலைத்
தமிழ்ப்பண்டிதர் திருவாளர் கு. குமாரசாமிபிள்ளை அவர்கள் இயற்றிய

## அறுசீர்க்கழில் நெடிலடியாசிரிய விருத்தம்.

---

உலகதனிற் கருணையிலா துயிருடம்பைப்
பிரித்துண் ணு முணர்வி லோர்கட்
கலகதனிற் றீக்கொளுவிச் செவிநுழைத்தா
லன்னதிறத் தறிவு காட்டிப்
பலகதனிற் றிசைவாழு முயிரினங்கள்
கூடிமிகப் பயில்பேச் சென்னத்
திலகதனிற் செட்டி நகர்க் கலியாண
சுந்தரமால் செய்தா னம்மா.

---

பொள்ளாச்சித் தாலூக்கா சந்தேகவுண்டன்பாளையம் ஆசுகவி,
மகா-ா-ா-ஸ்ரீ சு. குமாரசாமிப் புலவர் அவர்களால் இயற்றியது,

## அறுசீர்.

(1) பிறைபூத்த நெடுஞ்சடிலப் பெம்மான்றன் றிருவாக்கிற்
பிறந்த நான்கு
மறைபூத்த வெண்ணான்கு தருமமுதல் பலபுண்யம்
வழாது வேட்ட
நிறைபூத்த பன்னியொடும் நிதமிருந்து புரிந்திடினும்
நேமிசூழ்ந்த
தறைபூத்த வோருயிரைத் தான்வதைப்பரேல் நிரையஞ்
சாரவரேயால்

(2) புத்தி யென்பதின்றி நிதம் புனேவனவுமின்றி நிதம்
போற்றுந் தெய்வப்
பத்தி யென்பதின்றி மறப்பரசமயத்திருண் மடுவிற்
படிந்து சற்றுஞ்
சுத்தியென்பதின்றிநலம் துறந்தோறும் புலால்
விரும்பாத்தூயராயின்
முத்தியென்பதுண்டவர்க்கு மூலமறையாகமத்தின்
முடிவீதென்றே.

(3) சொற்றபல மூன்னூற்குத் தூயவுரையாய் நெடுநாட்
டொடர்ந்துதானே
கற்றபலனடைது மெனக்காருண்யத்திதற்கு நிகர் காசினிக்குண்
மற்றபல னேதென்று மானிடருக் கீண்டு கொலை மறுத்தற்பேரு
பெற்றபல நூலிருந்தும் பிரியவசனத்ததனைப்பேசினனல்

(4) நீடோங்கு கங்கைகுல நிருபனும்பணேசாலி நிரைவாரக்க
நாடோங்கு மணிமாட வோராட்டுக் குப்புசெட்டிநகரிலென்றும்
மாடோங்கும் நஞ்சப்பமனன்றவத்தாலவதரித்து மலர்மினேக்கு
பீடோங்குங் கல்யாணசுந்தரனு மேந்த்ரனென பிறங்குவோமே.

---

கோயமுத்தூர் ஜில்லா உடுமலேப்பேட்டை தமிழ்வித்வான் கர்ணமிர்தம்
திருவாளர்: வே. ரா. கந்தசாமி பிள்ளை அவர்கள்
## இயற்றிய சாற்றுக்கவி.

---

(1) சேல்வகுத்த கண்ணுள்பொற் றிருமகள்வாழ் வணிகநகர்
சேர்வோன் கங்கை.
பால்வகுத்த குலத்துள்ளான் நஞ்சப்ப பூபதியார் பயந்த சீலன்
மேல்வகுத்த ஞானமுள்ளான் கல்யாணசுந்தரனெம் மிக்கநண்பன்
நால்வகைத் தோற்றத்தார் நன்மகா நாடெனுநூல் நவின்றனனம்மா.

(2) அந்நூலிற் சொல்வதெலா மருள்முறையே ஜீவவதை
யகில நீங்கி
மெய்நூல்பற் பலவாய்ந்து மிகுஞானமொடுகல்வி மேலும்பெற்றுப்
பொய்நூலின் வஞ்சவழி போகாது புருடார்த்தம் பொலிந்த
கேள்வி
நன்னூலின் வழியொழுகி நலம்பலவு முறைபெறுநன்
மார்க்கந்தானே.

(3) கருணையிலா மதத்தவருக் கங்குசமாங் கொடுமையொடு
கயில் வாளேந்தி
பெருமையிலா துயிர்வதைக்கும் பித்தருக்கோர்
நன்மருந்தாம் பேய்பூதங்கள்
தருமமிலா வுயிர்பலியே தாவெனச்சொல் தருவினுக்கோர்
தகுகோடாரி
வருமமிலா துயிரளிக்கும் பெரியருக்கோர் வீடருளும்
வாய்மை தானே.

---

கோபமுத்தூர் தாலூக்கா விளாங்குறிச்சி
மகா-ள-ஸ்ரீ V. N. மருதாசலக்கவுண்டர் அவர்கள் இயற்றிய

## வெண்பா.

கொங்கின் வணிகநகர்க் கோமானெனதண்ணன்
துங்கக் கலியாண சுந்தரன்வாய்—நங்குகனுர்
தந்ததமிழ் வாசகத்திற் சாற்றுங்கொலே மறுப்பில்
சந்ததமூ றுங்கருணைச் சாறு.

---

கோயமுத்தூர் ஜில்லா பல்லடம் தாலூக்கா பெரிய குயிலே
திருமிகு சேதுபதி பண்டாரத்தால் இயற்றியது.

## அறுசீர்.

மால்வளர் குடுமிச் சோலே வணிக நன்னகரான் வண்மைச்
சூல்வளர் முகில் கல்யாண சுந்தர மனன்பூ வுய்வான்
நால்வகைத் தோற்றத்தார்மா நாடெனுங் கொலேமறுத்த
னூல்வகை யெடுத்துத் தேனினு வன்றன னுகரு வாமே.

## கட்டளேக்கலித்துறை.

கோலிற்சிறந்தது மன்னர் செங்கோல் விறல் கொண்ட வையாம்
வேலிற்சிறந்தது மாமயிலோன் கரவேனறுந்தீம்
பாலிற்சிறந்தது நல்லாவின்பா னடைபாய்ந்த தமிழ்
நூலிற்சிறந்தது கல்யாணசுந்தர னூலென்பவே.

கோயமுத்தூர் தாலூக்கா கணபதி
மகா-ா-ா-ஸ்ரீ ம. இராமசாமிக்கவுண்டர் அவர்கள் குமாரனும்
இந்நூலாசிரியர் மைத்துனரும் ஆகிய
தமிழ்ப் பண்டிதர்,
திருவாளர் கிருஷ்ணசாமிக்கவுண்டர் அவர்கள் இயற்றிய

## ஆசிரிய விருத்தம்.

கொலைபுரிந்தே யுண்டுழலும் கொடியோரும் இந்நூலைக் கற்ற போதே
நிலைகலங்கி யுளநெகிழ்ந்து நீள்கருணை வெள்ளத்தே திளைக்கு மாற்றில்
துலைநிகர்நாத் தூயோர்சொல் மேற்கோளும் வரலாறுந் தோன்றக் [காட்டி
விலைமதிக்க வறியாத விழுமியசொல் லாற்கோறல் மறுப்புச் [செய்தான்.
தெள்ளுதமி ழிலக்கணமு மிலக்கியமுந் தேர்ந்தபெரும் புலமை [மிக்கான்
உள்ளுதொறுந் தேனூறும் ஒள்ளியசொற் பாநடையால் யாத்தல் [வல்லான்
கள்ளுமலர்க் கடம்பணிந்த கந்தன்பாலன்புடையான் வணிக [ரூரான்
எள்ளலில்நஞ் சப்பனருள் கல்யாண சுந்தரனென் றேத்துந் [தூயோன்.

கோயமுத்தூர் தமிழ் பண்டிதர்
திருவாளர் கு. நடேச கவுண்டர் அவர்கள் இயற்றிய

## ஆறுசீரடியாசிரிய விருத்தம்.

(1) தகைத்தோற்றப் பெரியர்பலர் கொல்லாமைத்
தவந்தழைக்கச் சாற்று பன்னூல்
வகைத்தோற்றெண் பொருளனைத்தும் வடித்தெடுத்தின்
றமிழுரையால் வாசிப்போர்க்குப்
பகைத்தோற்ற மில்லாதபடி யுளங்கொள்
பான்மையினிற் பரந்த நான்கு
வகைத்தோற்றத் தார்கள்மகா நாடெனவோர்
நூலருளால் வழங்கினனால்.

(2) துலைகாட்டு நாவினவர் புகழ்சீரான் மஞ்சினங்க டுதைந்து
தோன்றி
மலைகாட்டு மாடமலி வணிகநகர் வேளாளன் வஃதே சொல் சூது
தலைகாட்டு வதில்லான் கலியாண சுந்தரப்பேர்ச் சைவச்சீலன்
கொலைகாட்டு வேடர்களு மிதுகேட்கி னருளொழுக்கங்
கூடுவாரே.

கோயமுத்தூர் வழக்கறிஞரும், கோயமுத்தூர் இந்து தேவஸ்தானக் கமிட்டித்தலைவரும் தமிழகத்தலைவரும் மகா-ள-ள-ஸ்ரீ வித்வான் கந்தசாமி முதலியார் குமாரருமாகிய
சைவத்திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் B. A.
அவர்களின் அபிப்பிராயம்.

---

எனது நண்பர் திருவாளர் R. N. கல்யாணசுந்தர கவுண்டர் அவர்கள் எழுதிய இந்நூலைப் படித்துப் பார்த்தேன். அன்பு என்னும் தெய்வத் தன்மையை உலகிற் பரவச் செய்வதே இந்நூலின் பெருநோக்கமாம். அன்பு பெருகினால் எல்லாவித குற்றங்களும் குறையும்.

மனிதக்கொலை மிகுந்த இந்நாட்டில் ஆடு கோழி முதலிய உயிர்க்கொலை மிகுந்திருக்கிறது என்று சொல்லவும் வேண்டுமா? மற்ற உயிர்க்கொலை செய்து செய்து பழகியதால் மனிதனுக்குள்ள இயற்கைச் சாந்த குணம் மாறி மிருக குணம் மேலிடுகிறது. ஆகையால் மனிதக்கொலையைக் குறைக்கவும் தடுக்கவும் வேண்டுமானால் மற்ற உயிர்க்கொலைகளைத் தடுக்கவேண்டும். இரத்தப் பெருக்கையும் காயங்களையும் கண்டால் மனம் பதைத்து உடல் நடுங்கும் குணம் பெருகவேண்டும். இப்படிக்குள்ள எவனும் எந்த பிராணியையும் வெட்டமாட்டான். மனிதர் தின்று உடம்பை வளர்ப்பதற்காகவே பிராணிகளைக் கொலை செய்கிறார்கள். அந்த ஆசையை உள்ளே வைத்துக்கொண்டுதான் சிறு தெய்வங்களின் பேரைச் சொல்லி அவற்றிற்குப் பலியாக ஏராளமான பிராணிகள் வதை செய்யப்படுகின்றன.

மேட்டுப்பாளையம் சுங்கச் சாவடியில் ஒருவன் ஒரு வாரம் உட்கார்ந்து அவ்வழியாய் மிருகமனிதன் கையால் அடிபட்டுச் சாகும் பொருட்டு ஓட்டிக்கொண்டு போகப்படும் மாடுகளின் தொகையை ஒருவன் கணக்கிட்டால் எவனும் பிரமித்துப்போவான். குழந்தைகளுக்கும் வயது வந்தவர்களுக்கும் அவசியமான பசுப்பால் இன்னும் கொஞ்சகாலத்தில் நம் நாட்டில் கிடைக்காமலே போய்விடும் என்றும் பூமி உழவிற்கு வேண்டிய எருவும் எருதுகளும் எல்லாம்

மனிதன் கையால் முடிவுண்டு இல்லாமலே போய்விடும் என்றும் உணர்வான். ஆகவே, உழவு பெருத்த நாடாகியும் உழவினாலேயே வாழும் நாடாகியும் உள்ள நம் நாட்டிலே உழவும் போய், உண்ணும் பாலும் போய்விட்டால் அவற்றால் வாழும் மனிதனும் போய் ஒழியவேண்டுமல்லவா? எனவே பிராணிகளைக் கொல்பவர்கள் தங்களைத் தாங்களே கொல்லும் தற்கொலை மாந்தர்களே யாவர். ஐயோ! மாமிச உணவின் கோரத்தன்மையையும் உடம்பிற்கு அதனால் விளையும் தாமத குணத்தையும் தடித்தனத்தையும் உணர்ந்தால் எந்த மனிதனாவது அதை உண்ண மனதாலும் எண்ணுவானா?

இந்நூல் கொல்லாமையையும், புலால் மறுத்தலையும் பரப்பும் நோக்கத்துடன் ஒரு மகாநாட்டு நடவடிக்கை உருவமாய் இனிமையாக எழுதப் பெற்றுள்ளது; யாவரும் படித்து எளிதில் அறிந்து கொள்ளத்தக்கது. இதன் பயனாக ஏதாவது சில உயிர்களாவது நமது நகரப் பாதுகாப்புச் சபைகளால் பாதுகாக்கப்படும் பிராணிகளின் கொலைக்களத்தில் கஸாப்புக்காரன் கத்தியினின்றும், சிறு தெய்வக்கோயிற் பூசாரிகளின் வாளின்றும் தப்புமாயின் அதுவே இதன் ஆசிரியருக்குப் பெருத்த மன ஆறுதலை அளிக்கும்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிரும் தொழும்

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்: மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவ தென்னிச்சை பராபரமே.

என்பன எந்நாட்டினும் எக்காலத்தும் எல்லாராலும் போற்றத்தக்க பெரியார் வாக்குகளல்லல்வா?

இந்நூலாசிரியருக்கு உலகம் நன்றி பாராட்டுகின்றது.

கோவை சேக்கிழார் நிலையம்
17—12—1928.

C. K. சுப்பிரமணிய முதலியார்.

உ

ஓம்சரவணபவ.

# விளம்பரம்.

---

குருவே துணை.

## நால்வகைத் தோற்றத்தார் நன்மகா நாடு.

---

அன்புமிக்க ஐயன்மீர்!

ஆழிசூழுலகில் சோழதேசத்தில் காழகத்தூரில் வேழத்தூரடியில் நடு இரவில் விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, ஆகிய நால்வகைத் தோற்றத்தவர்களாகிய நாமும் நம்முடைய சந்ததியார்களும் முன்னேற்றமடையவும், உலகின்கண் ஒற்றுமைபெறவும், சுதந்திரம் அடையவும் ஆண்டவனாற்றோன்றிய ஆன்மாக்களாகிய ஆறறிவுடைய மனிதவர்க்கத்தாரிடமிருந்து சமத்துவம் பெறக்கருதியும் நம்மனோர்க்கு ஏற்படும் அகாலமரண ஆபத்திலிருந்து மீள்வதற்கும், நம்நாட்டின் தலைவரும் நம் இனத்திற் பெரியாரும் சிவபெருமான் ஊர்ந்தருள நேர்ந்த உத்தம மூர்த்தியின் குல பரம்பரையில் அவதரித்த திரு. வீரசூரப் பிரதாப இடபமூர்த்தியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு மகாநாடு நடைபெறும் அவ்வமயம் அரும்பெரும் தலைவர்களாகிய வாரணத்தார் அவர்களும், தாண்டவமாடுறும் ஆண்டவர்கரமுறை மானார் அவர்களும், சேவலார் அவர்களும், உடும்பார் அவர்களும், மகரத்தாரவர்களும் இன்னும் பெரிய இனத்தலைவரவர்களும் வருவார்களாகையால் தாங்களொவ்வொருவரும் வந்து மகாநாட்டைச் சிறப்பாய் நடத்திக்கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்ற,

தங்கள் நண்பன்,

சாரங்கன்.

வரவேற்புக்கமிட்டித் தலைவன்.

மேடன்,

காரியதரிசி.

## (மகா நாட்டுக் கூட்டச் சிறப்பு.)

இன்று நடுநிசி 12 மணிக்கு மகாநாடு கூட ஆரம்பித்தது பரந்த உலகின் பல பாகங்களிலிருந்தும் பல அன்பர்கள் வந்திருந்தார்கள்.

இம்மகா நாடு இனிது நடைபெற வேண்டுமென்றும் தம் தம் ஜாதிகள் முன்னேற்றமடைய வேண்டுமென்றும் அவரவர்கள் முகக் குறியிலேயே தெற்றெனத் தோற்றியது.

ஆங்கு வரவேற்புக் கமிட்டியாரால் பிரதிநிதிகளின் சௌகர்யங் களை உத்தேசித்து, வேண்டிய உண்டி உறைவிட முதலிய வசதிகள் செவ்வனே செய்து முடிக்கப்பட்டிருந்தன. மகா நாட்டுப் பந்தலில் சபைத் தலைவருக்கு ஒப்பற்ற ஆசனம் சற்று உயரமாய் அமர்த்தியும் அதனருகில் உபசரணைக் கமிட்டியார்கள் அமர வசதிகளியற்றப் பட்டுமிருந்தன.

பிரதிநிதிகளுக்குத் தங்கடங்கள் ஜாதியாசார வழக்கப்படிக்குப் பிரிவு பிரிவாக இடங்கள்வகுக்கப்பட்டும், விளம்பரங்கள் கட்டப் பட்டும், ஆசனங்களமைக்கப்பட்டும் இருந்தன.

தன்னுயிர்போல் மன்னுயிரைக் காப்பாற்றும் திருவள்ளுவர், ஔவை, சிபிச்சக்ரவர்த்தி, சாந்தலிங்க சுவாமிகள், மனுநீதிச்சோழன், இராமலிங்க சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள், மஹாத்மா காந்தி முதலிய ஜீவகாருண்யத் தலைவர்களின் திருவுருவப்படங்கள் ஆங் காங்கே தொங்கவிடப்பட்டிருந்ததுமன்றி அநேகசித்ர விசித்ர அலங் காரங்களும் செய்யப்பட்டிருந்தன.

### 'தலைவர் வருகை.'

கிளி, குயில், வானம்பாடி, நாகணவாய் புட்கள், முதலிய உத்த மர்களின் வாத்திய கோஷமும், மயில் அன்னம் முதலிய நாட்டியர் களின் நர்த்தனங்களோடு தலைவரை வரவேற்கத் தலைவர் வந்து ஆசனத் தமர்ந்தார். எல்லோரும் எழுந்து நின்று ரிஷபமூர்த்திக்கு ஜே. நால்வகைத் தோற்றத்தார் நன் மகாநாட்டிற்கு ஜே, என்ற கரகோஷ ஆரவாரம் செய்து அமர, மைனவார் இனிமையாகக் கடவுள் வாழ்த் தும் ஜீவகாருண்யப்பாடலும் பாடினர்.

உ

ஜீவகாருண்யமே சிறந்த தருமம்.

# நால்வகைத் தோற்றத்தார் நன் மகாநாடு.

## வரவேற்புப் பத்திரம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந்துயர் தீர்கவே.

சகோதரப் பிரதிநிதிகளே! சீமாட்டிகளே!

முத்தமிழ் யாவும் கற்றிவுடைய விற்பன விவேக உத்தம சிகாமணிகள் கூடிய இப்பெரிய மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித்தலைவனாகவிருந்து உங்களை வரவேற்கும் பாக்கியம் எனக்குக்கிடைத்தது பற்றி நான் மிகச் சந்தோஷிக்கிறேன்.

நான் இத்தகைய பெரும்பாரத்தை ஏற்றுக்கொள்ள அசக்தனாகவிருந்தும் எனது சகோதரர்களின் திருவாணையை மறுக்க வியலாது இப்பணியேற்றேன். என்புன் மொழியுள் குற்றமிருப்பின் குற்றம் நீக்கிக் குணத்தைக்கொள்ள வேண்டுகிறேன்.

அன்பிற்குரிய சகோதரர்களே!

எனது உபசரணைப் பிரசங்கத்தை நிகழ்த்து முன் இம்மகாநாட்டிற்குத் தலைமைவகிக்க நமது வேண்டுகோளை மதித்து இசைந்து இங்கு தங்கி எழுந்தருளியிருக்கும் உத்தம மூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ வீரசூரப்பிரதாப ரிஷப மூர்த்தியார் அவர்களுக்கு இம்மகாநாட்டின் சார்பாக நான் நல்வரவு கூறுகிறேன்.

கனம் தங்கிய பெரியோர்களே!

ஆறறிவுடைய மனிதவர்க்கத்தார்களிற் சிலர்புரியும் கொடுஞ்செய்கைகளினின்றும் (விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன என்னும் நால்வகைத் தோற்றத்தாராகிய) நம்மவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டி இம்மகா நாட்டிற்குத்தலைமை வகிக்க மனமுவந்து ஏற்றுக்கொண்ட ஸ்ரீலஸ்ரீ வீரசூரப்பிரதாப ரிஷபமூர்த்தியவர்களின் தியாககுணத்திற்கு நாம் என்றும் மறவாது நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பேணற்குரிய பூணியாரவர்களே!

உம்முடைய திரு வவதார விசேஷத்தை நாங்கள் எவ்வாறு எடுத்துக் கூறவியலும் ஆயிரம் பணு முடியை உடைய ஆதிசேடனும் அஞ்சுவானெனினும் என் சிற்றறிவிற் கெட்டியவரை சொற்பமாய்க் கூறுகிறேன்.

தங்களுடைய குலப்பெருமையைக் கூறுமிடத்துப் பசுக்களின் நான்கு கால்களில் பிரமதேவன், பாதங்களில் குபேரன், இடையில் நாராயணன், உரோமத்தில் முக்கோடி தேவர்கள், வாலில் தர்ம தேவதைகள், யோனியில் ஸ்ரீ மகாலக்ஷுமி, மடியில் அமுதகூபாளர்கள், அடிவயற்றில் பன்னகர்கள், வயற்றில் அக்கினி, முசுப்பிற் சாவித்திரி, நெஞ்சில் பகலன், வரிமடிப்பிற் பார்வதி, கண்டத்திற்சிவன், தவடையில் அஷ்டவசுக்கள், முகவாய்க்கட்டையிற் சந்திராதித்தர்கள், புட்டத்திற் ஜீவன் முத்தர்கள், நடுநெற்றியிற் சித்தர்கள், மூக்கில் வாய்வு கொம்பில் யமன், செவிகளில் சப்தரிஷிகள், முகத்தில் இந்திரன், அவைகளின் ரத்தம் சந்தரகலை, மாம்சம் சக்தி, இப்படியாக அங்கங்கள் தோறும் தேவ இருடிகள் பொருந்தியிருக்கின்றூர்கள். இவ்வித உயர்வு வாய்ந்த கோ மாதாக்களின் குலத்தில் உற்பத்தியாகியும் முத்தொழிற் கர்த்தராகிய தற்பரனுக்கு ஏறார்ந்தோன் என்ற காரணப் பெயரைச் சூட்டிவைத்த உத்தம குலத்திற் பிறந்த தியாக மணியே! உம்மை இம்மகா நாட்டிற்குத் தலைமை வகிக்கவேண்டுமாறு வந்தனத்துடன் கேட்டுக்கொள்வதுடன், உலகவழக்கப்படிக்கு இம் மகாநாடு செய்ய வேண்டிய முக்கிய விஷயங்களைக் குறித்து என் சிறிய அபிப்பிராயத்தை வெளியிட்டு ஆசனத்தமர்கின்றேன்.

## தற்கால நிலமை.

பெரியோர்களே!

மகாமேன்மை பொருந்திய கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட எழுவகைத் தோற்றத்துள் விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன என்னும் நால்வகைத் தோற்றத்தவர்களாகியும், பல் வேறு இனத்தவர்களாயும், பல் வேறு குலத்தவர்களாகியும், பல் வேறு உருவத்தவர்களாகியும், பிறந்த நம்முள், ஒற்றுமையில்லாக் குறைவினலன்றே ஆறறிவுடைய சில, ஜீவகாருண்ய மற்ற மானிடவர்க்கத்துக் கொலை காரர்களின்

அக்கிரமச் செயல்களால் நாமும் நம் சமூகங்களும் சீர் குலைந்தும் சில வம்மிசங்கள் அடியோடு தொலைந்தும் சிலருக்கு அகால மரண அவஸ்தையாகிய மானிட மிருத்யு தேவதைகளால் பாதிக்கப்பட்டும் க்ஷீணித்தும் வருகின்றோம். இதுவிஷயம் அனேகர் தெரிந்திருந்தும் இதுகாறும் நம்முள் ஒற்றுமையான சங்கங்கள் கூட்டி முன்னேறவழி கோலாதிருந்த வருத்தம்நீக்குவான், நம்முள் சிலரின் நன்முயற்சியால் இம்மகாநாடு கூட்டப்பட்டிருக்கின்றது. இனியாகிலும் ஆறறிவுடையார்களிற்சிலர் செய்யும் கொடுஞ் செயல்களினின்றும் நம்மவர்களைக் காப்பாற்றிச் சுதந்தரம் பெற்றுக்கொள்ளத் துணைபுரிவீர்களென்று நம்புகிறேன்.

இதுகாறும் என் புல்லிய சொல்லுக்குச் செவிசாய்த்த உங்களனைவருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தி இம்மகாநாட்டிற்கு ஸ்ரீலஸ்ரீ வீரசூரப்பிரதாப ரிஷபமூர்த்தியவர்கள் அக்கிராசனம் வகிக்கவேணுமாய் அன்போடும் வணக்கத்தோடும் மீட்டுமொருமுறை கேட்டுக்கொள்ளுகிறேன்.

மகாநாட்டார்களுக்காக,
சாரங்கன்,
வரவேற்புக் கமிட்டித் தலைவன்.

உ
குருவேதுணை.

# தலைவரின் முன்னுரை.

அறுசீர் விருத்தம்.

உலகமுதற் சராசரத்தினுருவாகி யுருவுதொரு முயிராயென்று,
மிலகு தொழில்புரிந்தளித்துமழித்திடலே வியல்பாக விருக்குமீசன்,
பலகலைகளெனு மாஞ்ஞைப்படி நடந்தாருயிர் கொல்லாப்பக்ஷத்தோர்
தம், குலமிகவேபுகழோடு வாழவருட்பரம்பொருளைக்கும்பிட்டேனே.

காருண்யம் நிறைந்த கனவான்களே!

இம்மகா நாட்டிற்கு என்னைத் தலைமை வகிக்கவேண்டுமாறு தெரிந்தெடுத்ததைப்பற்றி நான் மிகச்சந்தோஷிக்கின்றேனாயினும்;

என்னைவிட மிகுந்த குலம், தகுந்த நலம், சிறந்த குணம், பரந்த அறிவு, செயிரியில் ஆற்றல், உயிர் காப்பாற்றல், முதலிய உலகிற்கு நலம் செய்வதே தொழிலாய் உள்ள பல பெரியோர்களிருக்கச் சிறியேனுகிய என்னை இப்பெரும் பதவி வகிக்கக் கட்டளையிட்டீர்கள். உங்கள் திருவாக்கை மறுக்க முடியாத நிலைமையிலிப்பணி யேற்றுக்கொண்டேன். உங்களுடைய கிருபாகடாக்ஷ வீக்ஷண்யத்தால் இம்மகாநாடு இனிது நடைபெறத்தும்பிமாமுகத்து எம்பெருமானைப்பிரார்த்தித்து என்சிறிய முன்னுரையை நிகழ்த்துகிறேன்.

பாருங்கள் பெரியோர்களே!

நம்மவருள் ஒற்றுமையென்பது பற்றுடன் அத்யாவஸ்யமாய் இருக்கவேண்டியது. அஃதில்லாக் குறையினலேற்பட்டதைச் சிறிதாராய்வாம்.

எம்மினத்துப் பசுக்கூட்டாத்தார்களாகிய கோமாதாக்கள் கொடுக்கும் அமிர்தமானது கடவுளர்களுக்குப் பிரீதியாயும் மானிடர்களுக்குச் ஜீவாதாரமாய் இன்றியமையாததாயும் இருக்கின்றது. சிறு குழந்தைகளுக்குப்பிறந்ததுமுதலே உண்பிக்கிறார்கள் பெரியவர்களிற் சிலர் இறக்கும்போது பணம்போட்டுப்பால் ஊற்றுகிறார்கள். வைதீகர்களுக்குப் பஞ்சகௌயமாகவும், வீடுகள் சுத்தம்செய்யச் சாணமாகவும் உதவுகிறது. சகல ஜீவன்களுக்கும் ஆதாரமாகிய வேளாண்மைக்கு எருவாகியும், நிலம் பண்படுத்தவும் நீர்பாய்ச்சவும் வண்டியிழுக்கவும் சினேகர்களின் கூட்டுறவைத் தேடிவைக்க வாகனமாகிப் பாடுபடவும் உதவுகிறார்கள் இதனாலன்றோ;

மாடில்லான் வாழ்வும்...............விழல் என்றார். (பெரியார்)

இவர்களுக்கு வேண்டிய ஆகாராதிகளுக்குத் தகுந்த மேய்ச்சல் கிடையாது, ஏற்படும் வேலைக்கு ஓய்ச்சல் கிடையாது, அன்பு பாய்ச்சல் கிடையாது; அத்தோடு பாலவயதிலேயே ஆறறிவுடையோர்களிற் சிலரின் ஆகாரத்தினிமித்தம் அடித்துவிடுகிறார்கள். ஃதைப்பற்றி அரசாங்கத்தார் அசிரத்தையாய் விடுகிறார்கள். மனுநீதி கண்ட சோழன் சரிதம் கண்டாரில்லை என் செய்வார் பாவம். இவ்வளவா!

நம் சகோதரராகிய காரியதரிசி மேடம் அவர்களின் பாடு திண்டாட்டத்தில்வருகிறது. அவர்களின் பெருமை அளவிடற்பாலதன்று.

முற்காலத்தில் நாரத மகாமுனிவருடைய யாகத்திலிருந்துதோன்றிக் கந்தக்கடவுளுக்குகந்த வாகனமாய்ப் பெருமைபெற்று உலகமாக்கட் குதவுவான்வேண்டி (ததீசிமுனிவரின் தன்மையைப்போல) தங்கள் உடம்பிலுள்ள ரோமத்தைக்கொடுத்துப் பற்பல ஆடைகள் பாங்காய் செய்து ஜோடி ஜோடியாய் அணிந்துகொள்ள உதவி செய்கிறார்கள், அத்தோடு (ஆட்டுரமில்லாக் காட்டை என் செய்வது) என்னும் பழ மொழிக்கு இலக்காய்க் கழனிக்குவேண்டிய எருவையும், காப்போ னுக்குவேண்டிய பொருளையும் கொடுத்து வருகிறார்கள். இவ்வித பக்திபூண்டொழுகுமிவர்களைக் காளிக்கும், பூதகூளிக்கும், தங்கள் தாளிக்கும், கருப்பராயனுக்கும், உருத்தமாடனுக்கும், நாட்டராய னுக்கும், பாட்டைவீரனுக்கும், வானத்துமங்குலுக்கும், பச்சரிசி பொங்கலுக்கும், விளையாப்பூமிக்கும், தளையாச்சாமிக்கும், இரதத் திற்கும், சரதத்திற்கும், பொருகளப் பூசைக்கும், திருவிழாப் பூசைக் கும், மடத்திற்கும், தடத்திற்கும் இன்னும் அனேகத்திற்கென்று அநாவசியமாகிய சாக்குப்போக்குச் சொல்லி வெட்டிப்பலியிட்டுத் தின்பதும் தவிர பெரிய நகரப்புரங்களில் ஆடடிக்கும் சாலை, மாட டிக்கும் சாலை முதலியதேற்படுத்திப் பல தெருக்களிலும் தோரணங் கள் கட்டித் தொங்கவிட்டுப் பார்ப்போர் மனம் பதைபதைக்கச் செய்கிறார்கள்.

இன்னும் வராகத்தாரைப் பார்ப்போம்: முற்காலத்தில் இரண் யாக்ஷன் என்னும் அசுரனாற் கட்டுண்டு பாதாளத்திற் சிறையிருந்த பூதேவியை மகாவிஷ்ணுவானவர் இவருடைய திருமேனியின் உதவி யைக்கொண்டன்றோ அரக்கனைச் ஜெயித்துப் பூமியைத் தூக்கிவந்து சகல ஆன்மாக்களையும் உய்யும்படி செய்விததார். சோமசுந்தரக் கடவுள் மதுரையில் இவருடைய திருமேனிகொண்டு இவர் வம்சத் தார் பன்னிருவர்களுக்குப்பாலளித்து மந்திரிப்பதவிநல்கித்தேசத்தை ரக்ஷிக்கச்செய்தார். இவ்வரிய குலத்திற்பிறந்த இவர்களைக்கொன்று அக்கினியிலிட்டு தீய்த்துப் பிய்த்துத்தின்கின்றார்களே! பலதேவதை களுக்குப் பலியிடுகின்றார்களே! அனேக அசுத்தத்தைச் சுத்தம் செய்பவர்பேரிற்றான தேவதைகளுக்குப் பிரியம்!

இன்னும் நம்முள் பறைவையினத்தார்களாகிய மயில் கோழி யவர்களைப் பார்ப்போம் முற்காலத்தில் ஆயிரத்தெட்டண்டங்களை அரசாக்ஷிசெய்த சூருரமுங்கிரியுந் துளைபட்டுருவத்தோடு வேல வர்க்கு அடியில் மயிலாகவும், கொடியில் கோழியாகவும் அன்றும்

இன்றும் என்றும் குன்றாப் பெருமைபடைத்த குலத்தோர்களாகியும் விடியற்காலத்திற் படிமிசையுலவச் சோம்பேறித் தடியர்களைத் தட்டி எழுப்பி வேலைக்குப்புகச்செய்யவும், வைதீக கர்மங்களைச் செய்யக் காலத்தை அறிவிக்கவும், உத்தம குருவாகி விளங்குகின்றார்களே! அவர்களின் அதிபால்ய வயதாகிய முட்டைகளிலும், குஞ்சுகளிலும் கணக்கற்றபேர் சேதமாவதோடு கத்திச்சண்டையில் மெத்தப்பேர்கள் குத்திக் கத்திச் செத்துப்போகின்றார்கள். அன்றியும், பறையன்றன் மலமுண்ணும் மெமையுண்ணும் புலையர்க்குக் குல மென்ன நல மென்ன கூகூ என்று கதருகிறார்களே, அதுவும் தோன்றவில்லையே.

காக்கை குருவி காடை கௌதாரி முதலியவைகளையும் கொன்று தின்கிறார்களே.

இன்னும் ஊர்வனவாகிய அணில் உடும்பு இவர்களின் க்ஷேமத்தைப்பார்ப்போம். ஸ்ரீராமருக்கு உதவியாகச் சேதுபந்தனம் செய்த போது கிருபை சுரந்து முதுகிற்றடவ முக்கீற்றுப்பெற்ற கண்ய வான்களென்று எண்ணிப்பார்க்காது கண்ணிவைத்து உண்ணப்பிடிக்கின்றார்களே. வடநாட்டுச் சில்லோர் ஓணன், பல்லி, பாப்பாணி இவைகளைக் கண்டால் உடனே கொன்று பச்சையாகப் பட்சித்து விடுகின்றார்களே.

இன்னும் நீர்வாழ்வனவாகிய மச்சம் அவர்களின் உச்சித குணத்தைச் சொல்லத்தரமா, ஸ்ரீ வைகுந்த வாசகராகிய விஷ்ணுவானவர் முற்காலத்திற் கொண்ட கோலமல்லவா நங்குலத்தவராகிய நந்தியெந்தை கொண்டதும் இக்கோலந்தானே.

(திருவிளையாடல் வலை வீசினது) அவர்கள் கதியும் நிற்கதியாகிறதே.

ஆகையினால் பெரியோர்களே இக்கொடும் செய்கைகளை நிவர்த்திக்கவேண்டி, சுதந்திரமடையவேண்டி; நம்முள் ஒற்றுமை பெற வேண்டி இம்மகாநாட்டிற் கண்டிக்கவேண்டியிருப்பதால் தாங்கள் சகோதர சகோதரிகளுடன் தவராது நாளையத்தினம் கூடப்போகும் மகாநாட்டிற்கு விஜயம் செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சபையோர்களே!

இன்று ராத்திரிக் கூடப்போகும் விஷயாலோசனைக் கமிட்டிக்கு அங்கத்தவர்களாகச் சிலரைத் தெரிந்தெடுக்கும்படி கேட்டுக்கொண்டு என்முன்னுரையை நிறுத்துகிறேன்.

ரிஷபமூர்த்தி.
தலைவன்.

## அன்று சபைக்கு வரமுடியாத சில பெரியோர்களின் வாழ்த்துக்களும் சமாச்சார ஓலைகளும் முறையே படிக்கப்பட்டன.

உடனே மகாநாட்டுக் கூட்டத்திலிருந்து தயார் செய்து வைக்கலான அடியில்கண்ட பெரியோர்களடங்கிய ஒரு பட்டியல் தலைவரிடம் கொடுக்க அதைத் தலைவர் வரவேற்புக் கமிட்டித் தலைவராகிய சாரங்கத்தாரிடம் கொடுத்துப் படிக்கச்சொன்னார்.

## நிறைவேற்றக் கூட்டத்துறுப்பினர்கள்.

தலைவர் மகா-ஈ-ஈ-ஸ்ரீ ரிஷபமூர்த்தி, மகா-ஈ-ஈ-ஸ்ரீ மெம்பர்கள் யானையார், பசுவார், சேங்கன்ரூர், கபிலையார், செம்மறியார், குறும்பையார், வெள்ளாட்டார், வராகத்தார், மயிலார், கோழியார், செம்போத்தார், கொக்கார், குயிலார், காடையார், மச்சத்தார், நண்டார், நத்தையார், உடும்பார், அணிலார், கிரியார், முயலார், இவர்கள் மெம்பர்களாக இருக்கவேண்டும் என்று நான் பிரேரேபிக்கிறேன்.

இப்படிக்கு,
குயிலார்.

நான் அதை ஆமோதிக்கிறேன். மூஷிகத்தார்.

இதைப் படிக்கக்கேட்ட சபையார் எல்லோராலும் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

## சப்கமிட்டியின் நடவடிக்கைத் தீர்மானங்கள்.

இன்று பாழடைந்த பசுமடத்தில் நடுநிசியில் ஸ்ரீலஸ்ரீ ரிஷபமூர்த்தியவர்களின் அக்கிராசனத்தின்கீழ் சப்கமிட்டி கூடப்பட்டது. ஒற்றுமை, சுதந்திரம் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மகாநாட்டின் நடவடிக்கையின் தீர்மானங்கள்.

### I. ஒற்றுமை.

நாம் நால்வகைத் தோற்றமாகவிருந்தும் நம்முள் ஒற்றுமைக் குறைவினாற்றான் இக்குறைகள் ஏற்படுகின்றனவாகையால் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

இவ்விஷயத்தைப் பிரேரேபித்த கபிலைப் பசுவாரின் பிரசங்கம்.

அக்ராசனாதிபதியவர்களே! சபையோர்களே!

மெத்தப் புகழ்படைத்த உத்தம மூர்த்திகளாகிய பெரியோர்கள் நிறைந்த சபையில் நான் பேச முன்வந்த விஷயத்தில் ஏதாவது பிழைபாடுளதாயின் பொறுத்துக்கொள்ள வேண்டிக்கொண்டு ஆரம்பிக்கிறேன்.

சகோதர சகோதரிகளே!

நாமெல்லாம் விலங்குகள், பறவைகள், நீர்வாழ்வன பத்துப்பத்து லக்ஷம் ஜீவாபேதங்களாகவும், ஊர்வன பதினொரு லக்ஷம் ஜீவ பேதங்களாகவும், அண்டசம், சுவேதசம், உற்பிசம் என மூவகை யோனிகளாகப் பிறந்தும் நம்முளொற்றுமைக் குறைவேற்பட்டிருப்பதனாலேயே பலவிதமாகிய இன்னலுக்குப் பாத்திரராகின்றோம். நம்மனோர்களை ஆக்கிக் காப்பாற்றக்கூடிய கடவுள் நமக்குள் ஒற்றுமையைக் காண்பிப்பான் வேண்டிச் சிவபெருமான் புலித்தோலுடுத்தும் புலிக்குப்பயப்படும் மானைக் கரத்திற்றரித்தும், மஹாவிஷ்ணு கருடனுக்கும் பாம்புக்கும் விரோதமெனத் தெறிந்தும் அவ்வாறு பகைகொள்ளாதிருக்க உத்தேசித்துக் கருடனை அருகிருத்தி அரவணை துயின்றார் கந்தக் கடவுள் மயிலினடியிற் பாம்பைக் கிடத்திவைத்திருக்கிறார் சத்தியும் தன் சிம்மத்தை ரிஷபத்தினிடம் விடுத்துச் சிவனிடமமர்ந்தாள். தேவ தேவோத்மனாகிய விக்கின ஹரக்கடவுளும் நாகஎக்ஞோபவீதம் தறித்து அதற்குப்பகையாகிய மூஷிகத்தின்மீது ஆரோகணித்தார். இவ்வாறு கடவுளர்களும், நம்முள் ஒற்றுமை யிருக்க வேண்டியதன் நிமித்தம் பிரத்தியக்ஷத்தில் காண்பித்திருக்கின்றார்கள். அலலாமலும் முற்காலத்தில் நீதிநெறிச் செங்கோல் நடந்துழி புலியும் பசுவும் ஒரு துரையில் நீரருந்தவும, கீரியும் பாம்பும் கூடி விளையாடவும், பூனையும் எலியும் பால்பருகவும் இருந்ததாய் முன் சரித்திரங்கள் கூறவில்லையா? ஆகையால் அன்பர்களே நாம் ஒற்றுமையாய் இருக்க வேண்டும்என்று பிரேரேபித்து என்னிடத்தமர்கிறேன்.

இங்ஙனம்,
**கபிலைப் பசுவார்.**

நான் அதை அவ்வண்ணமே ஆமோதிக்கிறேன்.

**செம்மறியார்.**

சபையோர்களால் ஏகமனதாய் அங்கீகாரம் செய்யப்பட்டது.

## II. சுதந்திரம்.

நம்முள் அனேகர்களைச் சில அறிவிலா மானிட வர்க்கத்தார்கள் அனியாயமாய்க் கொன்று தின்றுவருகிறார்கள். இனிமேல் நம்மவருக்குள் அவர்கள் எவரையும் கொல்லாதிருக்கும்படியாக இக்கூட்டம் கண்டித்து அவர்களிடம் நமக்கும் சுதந்திரத்தை வேண்டிக் கொள்ளுகிறது.

(இதைப் பிரேரேபிக்கப்பட்ட வெள்ளாட்டாரின் பிரசங்கம்.)

சங்கத்தவர்களே! அங்கத்தவர்களே! தலைவரவர்களே!

அடியேனுடைய புல்லிய சொற்களில் பல பிழைகளிருக்கலாம் அதில் இருக்கும் குறைகளை நீரைநீக்கிப் பாலைப்பருகும் அன்னம் போல வெற்றுரையை விடுத்து நல்லுரையைக் கைக்கொள்ளும்படியாக வந்தனத்துடன் கேட்டுக்கொண்டு என் பிரேரேபணைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

ஜீவகாருண்யச் செல்வர்களே!

நான் இச்சுதந்திரத்தைக் குறித்துப்பேச நீண்டகாலம் வேண்டி வருமென்று சபைத்தலைவரை அன்புடன் வேண்டிக்கொண்டு என் பிரசங்கத்தைத் தொடங்குகிறேன்.

பெரியோர்களே!

ஆர்கலிசூழ்ந்த பார்மிசை ஆதிநாயகனருளினாற்படைத்த எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவாபேதங்கட்குத் தக்கவாறு பல்வேறு ரூபங்களையும், பல்வேறு குணங்களையும், பல்வேறு அறிவாற்றல்களையும், பல்வேறு தொழில்களையும், பல்வேறு ஆகாராதி சுகபோகங்களையும் படைத்துக் காப்பாற்றிவருகிறார். அவற்றுட் கிடைத்தற்கரிய மானிடயாக்கையிற் பிறந்தாருக்குள் பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நான்கு வருணத்தார்களின் நிலைமையைச்சற்று ஆராயப் புகுவாம்.

ஆதிவருணத்தார்களாகிய அந்தணர்கள் கரியமாலினுங் கண்ணுதலானினும், உரியதாமரை மேலுறைவானினும், விரியும் பூதமொரைந்தினும் மெய்யினும், பெரியர் அந்தணர் என்றும், யாவராலும் பூசிக்கப் படுவோர் என்றும் நூற்களிற் கூறிவைத்திருக்கின்றார்களே அவர்கள் தொழில்களாகிய ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதலேற்ற

வென்றிவையாறு தொழில்களைக் கிரமமாய்ச் செய்து, உலகிற்காதார மாகிய மழையைப் பெய்வித்து அதர்மத்தை வீட்டி தர்மத்தை நிலை நாட்டி அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை உண்டாக்கி ஜீவஹிம்சை யைவாதித்து அஹிம்சையைப் போதித்து துன்மார்க்கத்தை விடுத்து சன்மார்க்கத்தைத் தொடுத்து நடப்பதை விடுத்து, சிலர் வேறுமார்க் கங்களை அடுத்து நம்மவர்களின் குடியைக்கெடுக்க அன்னியமத ஆசா ரங்களில் பிரவேசித்ததுமல்லாமல், முட்டைகளை யுடைத்து கருக்க ளைக்கெடுத்து மனம்போல குடித்துப் பஞ்சையாகிய குஞ்சுகளை நெஞ் சினில் அஞ்சாது தின்று பலவிதமாய்ப் புலாலைப் பக்குவப்படுத்தி நில வுலகின்கண் நீணெறி தவறி நிலைகுலைகின்றார்களே.

அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான். என்றும்.

தன்னுயிர் போல்வன சர்வான்மாக்களு
மென்னு நீ ரந்தணர்க் கியற்கை யதாமே.

இந்திரற் கட்டிலோ டீற்கும் வேதிய
ரவனூர் நலம் விழைந் தருந் தாளுனே.

சீரருள் விழைவோன் றெய்வப் பிராமண
னழற்றசை நுகர் வோனசுர வேதியனே.

என்றும் நூல்கள் கூறுகின்றனவே.

இக்காலத்தும் சில பிரமாணர்கள் கூடி அஜமேதம் செய்வதாகப் பேரிட்டுப் 13 ஆட்டைத் தின்றார்களே, அங்கு எந்தத் தேவதை இவர்களின் அவிர்ப்பாக மேற்றுக்கொண்டது.

அயமகத்தினில் அறநீபடுவதம்மரிகள்
செயிர்கதழ்ந்து கண்தீப்புக வரவுபார்த்திருக்கும்
பயில்விசும்பு செல்காலையில் வெருவரப்பாய்ந்து
வயிருபோழும் வல்லிரும்பி ணெண் மருப்பினின்மாதோ.

(பாகவதம்.)

அவி சொரிந்தாயிரம் வேட்டலினொன்ற
னுயிர் செகுத்துண்ணாமை நன்று—என்றும்,
நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்
கொன்றாக மாக்கங் கடை—என்றும்.

கூறிய நமது பொய்யா மொழியையே உணராத இவர்கள் பவுண்டரி யாகமும் (விதந்துவையும் பிர்மச்சாரியையும், பரண்மேல் விடுத்து

மூடி கீழே ஓமம் வளர்த்தல்.) செய்ததாக கேள்வி எடுத்த விஷயம் இதுவன்று. ஜீவகாருண்யம்,

பூசனை செய்யுங்கையாற் புலால்தனை யருந்துவோர்க்கு
யோசனை தூரநிற்ப னுமையொரு பாகன் கண்டீர்.

என கூறவில்லையா.

இவர்களுக்கு நம்மினத்தவர்களாகிய பசுவர்க்கத்தார் செய்யும் உபகாரங்களைக் கவனிப்பாம். பிராமணர்களுக்குக் கோப்பிராமணர் என்று பசுவின் நாமதேயத்தை முன்வைத்தன்றோ வழங்குகின்றார் கள். சிசுக்கள் முதல் விருத்தர்வரையில் பால் தயிர் நெய்யாகவும் கொடுத்து உபயோகப்படுகிறார்கள், யாகாதி வைதிக கர்மங்களுக்கு இன்றியமையாத பஞ்சகௌவியத்தைக் கொடுத்து உதவுகிறார்கள். சகல கர்மங்களுக்கும் சார்த்தகமானது பசு தானமல்லவா? இங்ஙன மிருக்க இவர்கள் ஜீவகாருண்ய மில்லாது பழிக்களாகின்றார்களே, பாவத்துக்குள்ளாகின்றார்களே, உயிருக்கெமனாகின்றார்களே, நம்மவர் களை இவர்கள் வயற்றுச் சுடுக்கட்டிற் சுட்டு நம்மவருக்குக் கர்மஞ் செய்கிறார்களே, நம்மவர்களை ஒரு கை பார்ப்பாராக இருக்கின்றார் களே, இதனாற்றானோ பார்ப்பாரெனப் பேர்பெற்றிருப்பார்கள், இவர் களிடம் நமக்குச் சுதந்திரம் வேண்டாமா, நிற்க.

இனி அரசவருணத்தாரை ஆராய்வாம்.

முன்னோர்களாகிய சூரிய சந்திர வம்மிசத்து வேந்தருக்குள் மீனக்கொடியோன், புலிக்கொடியோன், அரவக்கொடியோன், கருடக் கொடியோன், விடைக்கொடியோன், கோழிக்கொடியோன் எனப் பெயுரை வகித்துநம்மவரைஎவ்விதம் போற்றி வந்தனர், நம்மவர்களின் உருவத்தை எழுதிய கொடியாலன்றோ அன்னார்களுடைய நாட்டின் சிறப்பும், அரசின் சிறப்பும் விளங்கி வந்தன. மனுநீதிகண்ட சோழன் பசுவின் 'கற்றாவுக்காகப் பெற்றோனை ஈந்தான்' சிபிச்சக்கரவர்த்தி 'புறா விற்காகத் தராவிற் புகுந்தான்' இன்னும் அனேக அரசர்கள் நம்மினத் தவர்கள் அடைந்த கஷ்டத்தைக்கண்டு எவ்வாறு நிவர்த்தி செய்திருக் கின்றனர். இவ்வாறிருக்க, அரசவருணத்தார் நம்மீது கருணைகாட் டிச் சுதந்திரம் கொடாதிருப்பது தகுதியாமோ.

ஆலயம் பசுக்கள் அந்தணர் புலவர்
மாதர் கற் பாதியின் மன்னனோக்கம்
பெரிது வைத் தளிக்கிற் பீடுறுமன்றே. என்றும்

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். என்றும்

கூறவில்லையா. நிற்க.

இனி வைசிய வருணத்தார் செய்கையை வகுக்கின்றேன் வைசிய வருணத்து அறு தொழில்களாகிய,

ஓதல் வேட்ட லுபகாரமன்றியும்
வாணிகம் பசுக்காவ லுழவு தொழிலெனப்
புகன்றவை யறனால்
வேளாண் மாந்தருக்கு உழுதூணல்லது
இல்லென மொழிவ பிறவகை நிகழ்ச்சி.

(தொல் காப்பியனார்.)

நம்மிற் பெரும்பான்மையோர் அவர்களின் வேளாண்மைத் தொழிலுக்கு இன்றியமையாத சாதனங்களாக விருக்கிறோமல்லவா? எங்ஙனமெனில் உலகின்கண் சர்வ ஆத்மாக்களுக்குஞ் ஜீவாதாரமாய் உள்ளது வேளாண்மை யல்லவா?

இதற்காதாரமாய் உள்ளது எருவன்றோ, அதற்காதாரமாய் உள்ளது நம்மினமன்றோ, அதினாலன்றோ 'ஏறினும் நன்றாம் எரு விடுதல்' என்றார் நாயனார். பாரம் இழுக்கவும், வாகனாதிகளாகவும் உபயோகப் படுகிறார்கள் நமது நாயனார் முதற்பெரியோர்கள் உழவை எவ்விதம் போற்றுகிறார்கள்.

அலகிலா மறைவிளங்கு மந்தணராகுதி விளங்கும்
பலகலையாந் தொகை விளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாந் திருவிளங்கு மழைவிளங்கு மனுவிளங்கும்
உலகெலா மொளி விளங்கு முழவருழு முழவாலே.

அழுங்குழவிக் கன்புடையதாயே போலனைத்துயிர்க்கும்
எழுங்கருணைப் பெருக்காளரெளிய ரோ யாம்புகல
உழுங்கொழுவிற் கருவீறியுலகமுதற் கருவாகச்
செழுங்கமலத் தயனிவரைச் செய்துலகஞ் செய்வானேல்.

(கம்பர்.)

பலகுடை நீழலுந் தங்குடைக் கீழ்காண்ப
ரலகுடை நீழலவர். (திருக்குறள்.)

சுழன்று மேர்ப்பின்ன துலகமதனா
லுழந்து முழவேதலை. ஷெ

பரப்பு நீர்க்காவிரிப் பாவை தன்புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்.

(இளங்கோவடிகள் சிலப்பதிகாரம்).
நாடுகாண் காதை.

வாணிபத்துக்காகச் சரக்குகள் மாற்றவும் இறக்குமதி யேற்று மதிக்கு எவ்வளவு உபயோகம். ஆனதினால்த்தான் இவர்களுக்குப் பசுக்காப்பாற்றல் என்ற தொழில் இயற்றினர்.

பசுக்கூட்டத்திற்குப் புல் முதலிய ஆகாராதிகளைக் கொடுத்துக் காப்பாற்ருது எச்சில் தண்ணீர் காட்டுவது, தூரஸ்தீரிகள் தங்கு மிடம் அசுசியான இடம் புறக்கடை முதலிய இடத்தில் கட்டுவது, கன்றுக்குப் பால் விடாது கரப்பது, பால் இல்லாது இருந்தால் அடிப்பது திட்டுவது முதலிய அக்ரமங்களைச் செய்து வருகிறவர் களும் தாங்கமாட்டாச் சுமைகளை யேற்றி அதட்டி அடித்து ஓட்டு கிறவர்களும் கொடிய நரகத்திற் சேர்வார்களென்று நூல்கள் கூறு கின்றனவே, மனுஸ்மிருதியில் 9-வது அத்தியாய இறுதியில் சொல்வ தாவது,

வைசியன் மறைநூல் ஓதியபின் திருமணம் செய்துகொண்டு ஆவைக் காத்தலும் உழவு தொழில் நடாத்தலுமாகிய முயற்சியினை யுடையவனாக இருத்தல் வேண்டும். என்றும்,

நான்முகன் ஆனிரைகளைப் படைத்து காக்கும்பொருட்டு வைசி யனிடத்து ஒப்பித்தான். நாம் ஆக்களைக் காத்தல் கூடாது என்று வைசியன் நினைக்கலாகாது, என்றும் கூறினர்.

வடமொழிப் பொது நூலாகிய அமரநிகண்டில் வைசிய வர்க் கத்தைச் சொல்லுமிடத்து

உழவு, வாணிகம், ஆனிறையோம்பல் என்ற மூன்றிற்கும் உறி யார் வைசியரே எனவும் கூறினரன்றோ.

கொலைகடிந்து களவு நீக்கியும்
அமரர் பேணியும் ஆவுதியருத்தியும்
நல்லாரொடு பகடு ஓம்பியும்
நான் மறையோர் புகழ் பரப்பியும்.

பண்ணியம் அட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை
கொடுமேழி நசை யுழவர். என்றார்

பண்டைத் தமிழாகிய பட்டினப் பாலையில்.

முற்காலத்தில் கிருஷ்ணமூர்த்தியானவர் பசுக்காத்தலையே தொழி லாகக் கொள்ளவில்லையா? பசுக்களுக்காக கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து மழையைத் தடுக்கவில்லையா.

68111
R4
N28

உத்தராயண காலமாகிய தைத்திங்கள் தோறும் மாட்டுப் பொங்கல், (பட்டிப்பொங்கல்) என்று பூசை செய்கிறார்களே, கடவுள் மாதிரி போற்றுகிறார்களே பசுக்கூட்டத்தார்களின் உபயோகமும் மேடத்தார்களின் உபயோகமும் எக்குடியானவனும் உணராதிருக்க முடியாதே. நல்ல தீனிமுதலிய ஆகாராதிகளைக் கொடுத்து ரக்ஷித்தால் வேலை செய்யக் காத்திருக்கிறார்களே. வேளா வேளைகளில் நல்ல ஆகாரம் கொடாது கஷ்டப்படுத்தி வேலை வாங்கித் தளர்ந்தபின் கொலைகாரர்களிடம் ஒப்படைக்கிறார்களே இவர்கள் விருத்தியாவார்களா? நம் ஆகாரத்திற்குரிய நிலங்களை யெல்லாம் பேராசையால் சாகுபடி செய்து,

புற்குறை பசுக்குறை புருவையின்குறை
நெற்குறை பால்தயிர் நெய்யெருக்குறை
சொற்குறை யாவையும் தொடர நோக்குங்கால்
புற்குறை யிலாமையாற் புகுந்தவன் குறை.

என்ற இக்குறைகட் கெல்லாம் ஆளாகின்றார்களே, இன்னும் எருவுக்காதாரமாகிய ஆட்டார்களைக்கூட்டோட டித்துமாட்டி விடுகிறார்களே?

இவர்களிடம் ஜீவகாருண்யம் எங்கே? பசுக்காத்தல் எங்கே? சத்தியம் எங்கே? எங்கள் முன்னோர்கள் தொண்ணூற்றாறு கீர்த்தி பெற்றவர்கள் என்று டம்பம் பேசிக்கொள்ளுகிறார்களே, இவர்களுக்குப் பெயர் ஆள்காவலராமே, சிரேட்டிகளாமே, வேளாளர்களாமே, தாளாளர்களாமே, இன்னும் பல பெயர்களாமே எதற்காக இப்பெயர்களோ தெரியவில்லை. நம்மில் பற்பலரைச் சிற்சிலர் பதைபதைக்க கொன்று தின்கின்றார்களே இவர்களுக்கு வேளாண்மை பலிதமாகுமா ஆகையால் பெரியோர்களே இவர்களில் சில வகுப்பார்களால் இப்போது கூடிவரும் ஜாதிய மகாநாட்டிற்கு இச்செய்திகளை எடுத்துச் சொல்லி இத்துர்க்கிர்த்தியங்களைக் கண்டிக்க மகா-ள-ஸ்ரீ சேங்கன்றார் அவர்களும், மகா-ள-ஸ்ரீ செம்மறியார் அவர்களும் டெப்டேசன் (தூது) ஆகச் செல்லல் வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு மேல் ஆராய்கின்றனன்.

காருண்யம் நிறைந்த கனவான்களே !

சபைத் தலைவர் அவர்கள் அதிக காலம் ஆகின்றதென்று ஆஞ்ஞைபிடுகின்றதனால் சுருக்கமாக இரண்டொரு வார்த்தைகள் கூறிக் கொண்டு நிறுத்திக்கொள்ளுகிறேன்.

சூத்திர வருணத்தார் செய்கை சுருங்கக் கூறுமிடத்து நம்முள் அநேக ஜாதியார்களே வலையிலும் வேட்டையிலும் கண்ணி வைத்தும் தூண்டிலிட்டும, துப்பாக்கியால் சுட்டும், வில்லாலடித்தும், ஒளியாற் பிடித்தும், விற்பனை செய்தும், கொலைசெய்தும், தின்றும் இதுவே தொழிலாகத் திரிகின்றார்களே இவர்களுக்குக் கடவுளால் ஏற்படுத்திய வேறு வேலையில்லையா? இவர்களுடைய மறு ஜென்மத்தில் இத்தனை ஜீவன்களும் இவர்களைக் கொல்லவல்லவோ போகின்றன.

கொன்றன வனைத்து மனைத்து நினைக்கொன்றன
தின்றனவனைத்து மனைத்துநினைத்தின்றன

என்று பட்டினத்து அடிகள் படித்துப்படித்துக் கூறவில்லையா.

உயிர்கொலையூனுணவுடையாரெவரு—
மைந்தாங்குலத்தினரா மெனன்முறையே—எனவும்.

வேதஞ் சொல்லினும் விரிஞ்சனுதியர்
நேரிற்கூறினும் நீசர்க்குரித்தாங்
கொலைபுலை செய்தல் கூடாதன்றே. எனத் தண்டபாணி சுவாமிகள் கூறிவைத்தாரே; ஐயையோ தெய்வமே அவர்களைப் போலல்லவா எங்களையும் படைத்தீர்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லாவுயிருந்தொழும். என்றார் திருவள்ளுவர்.

ஆகையால் இனிமேலாவது கொன்றுதின்னாது நம்மவருக்குச் சுதந்திரம் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டு என்புல்லிய மொழியை மெல்லென முடிக்கின்றேன்.

இப்படிக்கு,
வெள்ளாட்டார்.

நானும் அதை அவ்வண்ணமே ஆமோதிக்கிறேன்.

குரும்பை ஆட்டார்.

சபையோர்களால் ஏகமனதாய் அங்கீகாரம் செய்யப்பட்டுத்தீர்மானிக்கப்பட்டது.

# சுதந்திரம் II.

உடனே கோழியார் மேலேயெழுந்து சபைத்தலைவரின் தாளே பணிந்து அவையார்களினடியில் முடியைச் சேர்த்துச் சிறியேன் செய்துகொள்ளவேண்டிய விண்ணப்பம் ஒன்று உண்டு, அதிற் பல பிழையிருப்பினும் "ஆழியுடுத் தார் புவியி லங்கண நீ ராழ்ந்தகன்ற
சூழிதனிற் சேறிற்றள் ளாது கொளுமாறு போலப்
பொறுத்துக்கொள்ளவேண்டிக்கொள்ளுகிறேன்.

சகோதரப்பிரதிநிதிகளே!

இதுகாறும் நமது வெள்ளாட்டார் செய்துவந்த உபன்யாசங்களுள் பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர என்னும் நான்கு வருணத்தார்களைப்பற்றியும் அவர்களிடம் பெறவேண்டிய சுதந்திரத்தைப் பற்றியும்மொழிந்தார் நானும் என் சிற்றறிவிற் கெட்டியவரை பிரம்மச்சாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்த்தன், சன்யாசி என்னும் நான்கு ஆச்சிரமத்தார்களிடம் பெறவேண்டிய சுதந்திரத்தைப் பற்றிச்சிறிது கூறியமர்கின்றேன்.

ஜீவகாருண்யச் செல்வர்களே!

பரமாத்மாவாற் படைக்கப்பட்ட ஜீவர்களின் சரீரங்களில் ஆறுவித ரசங்களுண்டு புசிக்கும் ஆகாரத்தின் ரசம் ரத்தமாக மாறி மாம்சத்திலும், அதனின்று கொழுப்பிலும், அதனின்று எலும்பிலும் அதனின்று மூளையிலும், பிரவேசித்துப் பின் சுக்கிலமாக மாறுகின்றது. உழக்கு ரத்தம் சுண்டி ஒரு துளி சுக்கிலம் உண்டாகிறது. இப்படிப்பட்ட சுக்கிலமானது ஒரு சம்போகத்திற்கு முப்பதுளிக்கு மேல் செலவாகிறது. ஆதலால் மனிதவர்க்கத்தாருள் பெண்கள் ருதுகாலமாகிய பூத்து நீராடிய காலமுதல் 12 நாள் வரைக்கும் இருமுறைதான் சம்போகம் விதிக்கப்பட்டிருக்கிறது இதினாலன்றோ;

விந்துக்கெட்டால் சத்திகெடும்
சத்திகெட்டால் புத்திகெடும்
புத்திகெட்டால் முத்திகெடும். என்று பெரியார்

கூறுகின்றார். ஆகையால் அவ்வருமை வாய்ந்த அறுகுந்தனிபுனிய னைய சுக்கிலமானது சுரோணிதத்துடன் ஷை பன்னிரண்டு நாள்

களுக்குள் ஒற்றைப்பட்ட நாள்களில் கூடினுல் பெண் கருப்பம் என்றும் இரட்டைப்பட்ட நாள்களில் கூடினுல் ஆண் கருப்பம் என்றும் தாய்தந்தையர்களின் சித்தவிருத்திக்குத் தக்கவாறு கருப்பம் உற்பத்தியாகிச் செய்யும் கிரியையாகிய புஞ்சவனமும், மூன்றிடம் வெண்மையுள்ள முள்ளம் பன்றி முள்ளினுல் தலைமயிரை வகிர்ந்து செய்யும் கிரியையாகிய சீமந்தமும் அதற்குள்ளடங்குங் கிரியையாகிய விண்டுபலியும் மாதந்தோரும் செய்யும் கிரியையாகிய சிலசடங்குகளையும் செய்து சந்தோஷத்தோடு மகவைப்பெற்றுப் பதினேராம் நாள் ஜாதக கர்மம் நாமகரணம் செய்வித்து நாலா மாதம் சந்திமிதிப்பித்து ஆரூமாதம் அன்னமூட்டி தம்தம் ஜாதி வழக்கப்படி சௌளமாகிய குடுமி வைத்து ஐந்தாம் ஆண்டில் ஆசிரியரிடம் சேர்த்து, அத்தியட்சகர் ஆசிரிதரோடான்ற - பத்திமாணவர் பகுதிமூன்ருகும். இரணியன் கான்முளை என்னவே முதியோர் - முரணுறநேரினு முற்றிய வறதால் வாய்மையே காக்கும் வன்மையார் நோன்பும் - தூய்மையாயினவை தொடர்தலுமாகும்.

## (அஹிம்சை.)

கூறிலெவ்வுயிரையும் கொல்லா நிலையும்-மாறியன்னியர்கள் தனைவருத்திடினும், பொறுத்தலுமன்ஞர்புலம்புறவெதிராய்-ஒறுத்தலெவ்விதமுமொழித்தலுமதனுல் தீயரையரசரைத்தீமையினின்றும்-தாயினல்லன்பால்தடுத்தலுமாகும்.

## பிரமசரியம்.

நுண்ணியமடவார் எதிர்வரில் நோக்காத்
திண்ணியவறிவும் சிந்தையினுன்னும்
காமமென்பதனைக் களைந்திடமுயலும்
நேமமுமுக்கிய நியதியாந்தினமும்
காலையுபாதி கழித்திடற்கேகும்
வேலையில் மார்பு வெளிப்படாவண்ணம்
துகில்மறைத்துத் துலங்கியவாயினைத்
திறவாரும் செல்லுதல் முறையாம்.
நிறைவாய்மாந்தர் செல்லுறு நெறியிலும்
புற்றரைதன்னிலும் புணரிடுகாட்டும்
இற்றிடைபாழாம் இல்லினும் வாவி

ஆற்றினதருகிலும் ஆர்தருபுற்றிலும்
சாற்றியமலையிலும் சார்ந்திடாதுறுதல்
முறையெனமொழிவ ராலொடு முதிர்ந்த
குறைபடுவேலின் குச்சிகள் தன்னால்
வெள்ளெனப்பற்கள் விளக்குதல்கடனும்
ஒள்ளியகதிரோன் உதித்திடற்கைந்தாம்
நாழிகைமுன்னரே நன்கிவை முடித்துச்
சூழியபுனலிற் றோயந்திடல்வேண்டும்.
கண்டமட்டாகக் கழிபுனல்படிதல்
அண்டியநோய்பல வளித்திடுமதனால்
உரம்படமெய்முகம் ஒளிமிகப் பொலியச்
சிரமுரமூழ்கும் செய்கையே யறமாம்
அங்கதன்பிற்பட ஆசான்குறித்த
பங்கினிற்கல்வி பயிலுதல் முறையாம், எனவும்.

ஈன்றா ளவளனை யார்மனை யையமேற்றுண்
டான்றோர்புகழுவொரு வேதமமைந்தபின்னர்ச்
சான்றோர்மதிப்பச் சமாவர்த்தனமாற்றி மிக்க
வான்றோய் பிறைவாணுதல்மன்றல் முடித்தல்வேண்டும்

என்று சொல்லிய பிரமச்சரியம் காத்துவரவேண்டிய ஒழுக்கமும் விடுத்து,

சிறு பூச்சிகளையும் குட்டிகளையும் குஞ்சுகளையும் கயிற்றாற் பிணைத்தும், முள்ளைப்பாச்சியும், பறக்கவும், குதிக்கவும் விடுத்து அவைகள் பதைப்பதைப் பார்த்துக் களிகளிக்கின்றார்கள். வழியிற் செல்லும் குளைமுகத்தாரையும், காளவாயாரையும், மலம்பிஞ்சுகளால் அடித்தலும் செய்கின்றார்கள். தங்கள் தாய் தகப்பன்களைக் கொண்டு நம்முடைய புத்திரபவுத்திராதிகளாகிய குட்டி குஞ்சு முட்டைகளைக்கொன்று தின்கிறார்கள். இனிமேல் இவ்வாறு செய்யாதிருக்க வேண்டியது என்று இச்சங்கம் வற்புறுத்துவதுடன் அக்கொடிய செய்கைகளைச் செய்யும் சிறார்களை நம்முள் குளைமுகத்தாரைக் கடிக்கவும், காளவாயாரை உதைக்கவும் செய்விக்கவேண்டியது. அதற்குக் குளவியாரும், தேனீயாரும், கோதும்பியாரும், தேளாரும், நட்டுவக்காலியாரும், ஆலத்தாராகிய சர்ப்பத்தாரும் உதவி

செய்யவேண்டியது. என்று தீர்மானித்து அந்தப் பிர்மச்சாரி யாச்சிரமத்தார்களிடமிருந்து பூர்ண சுதந்திரம் அடைந்து கொள்ளவேண்டும் என்றும் அதன்படி நடக்கச் சம்மதிப்பீர்களென்றும் உங்களுக்குச் சம்மதமாகவிருந்தால் சம்மதத்தைக் காகோஷமுதலிய செய்கைகளால் தெரிவிப்பீர்களென்றும் எதிர்பார்க்கிறேன்.

(உடனே கரகோஷமுதலிய ஆரவாரங்கள்).

சந்தோஷங் காட்டிச் சம்மதம் கொடுத்த சகோதரர்களே!

## நல்லறமாகிய இல்லறத்தார் செய்கை எண்ணிப்பார்ப்பாம்.

மேலே சொல்லியபடி ஒரு வேதமாயினும் கற்றுச் சமாவர்த்தனம் செய்துகொண்டு பொருந்திய குலத்திலே கர்மவியாதி, ஆண்மகவு இல்லாது பெண்களே அதிகமாகப் பிறத்தல் உலகத்தாரால் பழிக்கும்படியான குலம் சர்ப்பம் நக்ஷத்திரம் பறவை முதலியதுகளின் நாமதேயம் முதலிய குற்றமுள்ளவைகளை நீக்கி இனிய மெல்லிய மொழியுடையவள், தன்வயதிற்கு குறைந்தவள், கோபமிலாக் குணமுடையவள், சந்திரனென முகமுடையவள், முப்பத்திரு அங்கலக்ஷணமுடையவள், மைந்தர் பலபேர்களோடு பிறந்தவள், ஜீவகாருண்யமுடையவள், கடவுள் வழிபாடுடையவள், அடியார் பக்தியுடையவள் தாய் தந்தையர்களைப் போற்றும் குணமுடையவள்.

அன்னைதயையும் அடியாள் பணிவிடையும்
பொன்னினழகும் புவிபொறையும்—மின்னி
வேசிதுயிலும் விறல்மந்திரி மதியும்
பேசிலிவையுடையாள் பெண். என்ற

குண லக்ஷணங்களோடு கூடிய ஒரு பெண்ணை, பிரமம், தெய்வம், ஆரிடம், பிரசாபத்தியம், அசுரம், காந்தருவம், இராக்கதம், பைசாசம் என எட்டுவித மணங்களுள்;

(1) பிரமம்: பிரமசரியம் காத்த தக்கவரை அழைத்துப் பெண்ணைச் சருவாபரண பூஷிதையாய் மன்றல்வினை முடித்துக் கொடுத்தல்.

(2) தெய்வம்: யாகாதிகிரியைகளை விதிப்படி செய்தவர்களுக்குப் பெண்ணைக் கொடுத்தல்.

(3) ஆரிடம்: மணமகனுடைய கோத்திரத்தார் கொடுத்த பரியப் பொருளத்தனை சேர்த்துப் பெண்ணைக் கொடுத்தல்.

(4) பிரசாபத்தியம்: மணமகனுடைய கோத்திரத்தார்கள் பெண்ணை என்மகனுக்கு கொடு என்று கேட்டபின் அவர்களிடம் யாதொரு பொருளும் வாங்கிக்கொள்ளாது பெண்ணைக்கொடுத்தல்.

(5) அசுரம்: மணமகனிடம் அதிகமான பொருள்களைக் கவர்ந்துகொண்டு பெண்ணைக் கொடுத்தல்.

(6) காந்தர்வம்: வதூவரர்கள் தங்களுக்குள் தனிமையில் ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டுக் கூடிக்கொள்ளுதல்.

(7) இராக்கதம்: ஒருவன் ஒருத்தியை வலிதிற்கொள்வது.

(8) பைசாசம்: மயக்கத்தினாலும், தூக்கத்தினாலும் இருக்கும் பெண்ணை விகாரத்தினால் தலைதடுமாறி களவினாற் கூடுவது.

இப்படிப்பட்ட எண்மணங்களுள் முதனான்கும் உத்தமம் அடுத்த இரண்டும் மத்திபம். அடுத்ததுகள் அதர்மம். என்று கூறியிருக்கிறது. அதில் விலக்கிய நீத்து விதித்த முறைப்படி இருமுதுகுரவர்களியைந்து மணச்சடங்கியற்றிக் கைப்பற்றிக் கொண்ட கனங்குழையாளொடு.

திங்களிற்றிங்கள் முன்னாள் சென்மநாளம்மாவாசை
மங்கயர் மூன்றுநாளும் வரும்பிறை யுதித்தநாளும்
பொங்கிய யேகாதேசி பூவையைப் புணர்வீராகில்
அங்கமுங் கருத்துமேனி ஆருயிரிழப்பர் தாமே.

உச்சியம் போழ் தோடுயாமம் ஈரந்தி
மிக்க விருதேவர் நாளோடு வாத்திதிநாள்
அட்டமியு மேகளை பிறந்த நாளிவ் வனைத்தும்
ஒட்டாருடனு ரைவார்; என்ற விலக்கிய

நாள்கள் நீத்து இன்பந்துய்த்தீ விதிப்படி பஞ்ச யக்யுங்களாகிய தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற முறைப்படி உண்பித்துச் சத்கார்யங்களைச் செய்து சினமாதியறுகுணச் செய்கைகளாகிய கோப, மோக, மத, மாற்சர்ய, காம, லோப 'மென்னுங் குற்றங்களைந்து காதன் மனையாளுங் காதலனுமாரின்றித்தீதில் கருமு

மியற்றி அறஞ்செய்து பொருளீட்டி இன்பத்துய்ந்து நீக்கற்கரிய துன்பம் வந்தபோதுங் கைக்கொண்ட கருமம் கடவானுகி ஐயம்புகி னும் செய்வனசெய்து விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு இருந்தோம்பி இல்வாழ்ந்து நடக்கவேண்டிய இல்லறத்திற்குரிய நல்லறமாகிய அறவினையாதெனிற் கொல்லாமை கோறல் பிறவினை யெல்லாந்தரும், என்ற நீதியையும்

கொலையொடு களவுகள் காமம் கோபமென்
புலைகடிங் தைவகைப் புலனுமோம்பின
நிலையினினனுவது வழுவினில்லற
மலைவுற நரகிடையடைக்கு மல்லவோ.

என்பதையும் விடுத்து சிலர் தம்குடும்பம் அபிவிர்த்தியடைய வேண் டும் என்னும் மூடக்கொள்கையை அனுசரித்துத் தேவ சன்னிதானங் களில் நம்மவர்களைப் பலியிடுகிறுர்கள். நம்மையும் அவர்களையும் படைத்துக் காப்பாற்றக்கூடிய தெய்வங்கள் இவர்கள் கொண்ட மூடக்கருத்தாகிய பிரார்த்தனையைக் கேட்டு நாம் பிராணுவஸ்த்தை யில் முறையிடும் கூக்குரலைக்கேளாதொழித்து நம் ஆவியை ஏற்றுக் கொள்ளுமா? அப்படி ஏற்றுக்கொண்டால் கடவுளுக்குச் ஜீவன் களிடத்தில் பாரபக்ஷமல்லவோ ஏற்படும். சர்வ ஜீவதயாபரன் என்ற பெயர் கடவுளுக்கு எங்ஙனம் பொருந்தும், கடவுள்தான் பலி கேட் கிறுர் என்று சொல்லுவாராகில் கடவுள் சன்னிதியில் சில ஜீவன்களை அடைத்து வைத்தால் கடவுளுக்குத் தேவையான ஜீவன்களைத் தானே கொன்று பலி யேற்றுக் கொள்ளட்டுமே.

அப்படிக்கின்றித் தின்பதுகருதி கடவுளின்பேரில் பழியைச் சுமத்தி பழிபாவத்திற்குள்ளாகி ஊண் உண்ண அண்ணுத்தல் செய் யாதளறு என்றபடி மீளா நரகிற்காளாகின்றுர்களே இவர்கள் முறை யைத் தேவதைகள் கவனிக்கும் என்ற மூடக்கொள்கை போலவே ஒரு சமயம் கவனித்தால் நாம் முறையிடும் மறணுவஸ்த்தையாகிய பெரிய முறையைக் கேளாது விட்டுவிடுமா. நிற்க

தின்னற் பொருட்டாகவே கொல்லுகின்றுர்களே இவர்கள் சரீர நிலைமைக்கேற்ற ஆகாராதிகள் இல்லாது ஒழிந்துவிட் டனவா? முற்காலத்து நூலாராய்ச்சிக்காரர்கள் மனிதருடைய பற்

கள், இறைப்பை இவைகளின் அமைப்பையும் ஜீரணிக்கும் தன்மையும் தெரிந்து மனிதர் புலால் உண்டு திரியும் பிராணிகளை ஒத்திருக்கவில்லையென்றும், புல்பூண்டு தின்னும் பிராணிகளை ஒத்திருக்கிறார்களென்றும் கூறுகிறார்களே, அதனாற்றான் மாம்ச பக்ஷணிகளாகிய சிலர் கோறப் பற்கள் இல்லை என்று முள்முதலிய கத்திகளையும், ஜீரணிக்கவில்லையென்று லாகிரி முதலிய வஸ்துக்களையும் உபயோகிப்பது பிரத்தியட்சமல்லவா இதனாலேயே மானிடசரீரத்திற்கு மாம்ச பக்ஷணம் கூடாதெனப்புலப்படவில்லையா.

அக்கே போலங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோயழுபவே—மிக்க
அலவனைக்கால் முரித்துக்காதலித்துத்தின்ற
பழவினை வந்தடைந்தக்கால். என்று கூறவில்லையா.

இன்னும் சிலர் கொல்லாமலும், கொன்று தின்னாமலும் வேடிக்கையாக பக்ஷிகளையும், பிராணிகளையும் காரணமில்லாது கூட்டிலடைத்து வைத்துக் கஷ்டப்படுத்தி வருகின்றார்களே இவர்களுக்கு நாம்படும் கஷ்டத்தில் என்ன ஆனந்தம் விளையுமோ தெறியவில்லையே; "காட்டுளாய் வாழும் சிவலும் குரும்பூழும் கூட்டுளாய்க் கொண்டுவைப்பார் இப்பிறப்பில் விலங்கு பூண்டு திரிந்து மறுபிறப்பில் நரகத்தை அடைவார்களே."

ஒருயிர் தன்னைக் கோரல் செய்தோர்கள்
உயிரினை அவ்வுயிரெய்தி
சோர்வுரக் கொல்லுமாதலற் கோறலாதல்மற்
றொழிந்திடல் வேண்டும்.

என்றுபெரியார் கூறவில்லையா? ஆகையால் இல்லறத்தார்கள் நம்முள் ஒருவரையேனும் கொன்று தின்பதில்லையென்றும், கூட்டிலடைப்பதில்லை யென்றும் வாக்குறுதி செய்து கொடுக்கும்படி இம்மகாநாட்டின் மூலமாய் வேண்டிக்கொண்டுமேல் ஆராய்கின்றனன்.

அன்பர்களே!

## வானப்பிரஸ்த் தாச்சிரமிகளைப்பற்றி வகுக்கின்றேன்.

இல்லறத்தை விதிப்படி நடப்பித்து ஐம்பது வயதிற்குமேல் உத்திராயண காலத்தில் தன் நாயகியைப் புத்திரர் வசம் ஒப்பித்தாவது உடன் இட்டுக்கொண்டாவது கானகம் புகுந்து காய்கனி கிழங்கு முதலிய கந்தமூலங்களை அருந்தி அதிதி பூசை செய்து அழற்கருமம் பஞ்ச எச்சங்கள் செய்து மயிரையும் நகத்தையும் சேதிக்காது மூன்று காலம் நீரினில் மூழ்கி எட்டுக்கவளம் ஏற்று அருந்தி நகரத்துள்ள வஸ்துத்துகளில் வெறுப்புற்று இறைவன் திருவடி விருப்புற்று, இரவினில் உணவு இல்லாததாகிப் பார்ப்பதி மணாளனைத்தியானம் செய்திருத்தல் வேண்டும்.

அப்படியிருக்கப்பட்டவர்கள் மாதரைப்புல்லி மகவினைப் பயந்தால் ஒழுக்கம் அவரைவிட்டு நீங்கி நரகத்தையடைவதும் தவிர அவருக்கு ஏற்படும் புத்திரர்கள் ஓதுவதற்கும் உரியாரல்லாராகி அவர்கள் மரபு குற்றமடையும், அல்லாமலும் வனத்தில் சஞ்சரித்து பெரியபாரையிற் கண்ணுரங்கி பதினைந்து நாளைக்கு ஒரு தடவை சிறிது ஆகாரம் தேடவும். அதையும் பசித்தவர் வரில் ஒழிக்காது உதவி காடுமலைகளிலிருக்கும் வனநெல்லை தன்பல்லே உரலாகக்குத்தி ஒரு நாள் இடைவிட்டேனும் ஆறுநாளைக் கொருமுறையேனும் ஆகாரம் அருந்துதல் வேண்டும். பதன் செய்யாத புலித்தோலைப் புனைந்தும், அதுவே போர்வையாகப் போத்தியும், உமாபதியை சதாநினைந்தும், பஞ்சாக்ஷரம் செபித்தும், உபநிடதத்தின் உட்பொருள் தெரிந்து உலகின்கணுள்ள நலம் பெருமதியினற்கு நன்மார்க்கத்தையும் ஜீவஹிம்சையையும் பாவபுண்ணியத்தையும் போதித்து கிருதார்த்தர்களாகி நல்வழியிற் செலுத்தவேண்டியது. வானப்பிரஸ்த்தாச்சிரமிகளின் கடமையாகவிருந்தும், ஏனோ ஜீவஹிம்சை செய்வார்களைப்பார்த்துச் சும்மா இருந்துவிடுகிறார்கள். சிலர் தாங்களுங்கூட ஜீவ வதை செய்யத் தலைப்பட்டும் செய்தும் வருகிறார்கள். ஆகையால் அவர்களிடமும் சுதந்திரம் பெற்றுக்கொள்வதோடு பதைக்கப் பதைக்க வதைத்தலைச் செய்யும் பாபிகளுக்கு நற்புத்தி போதிக்குமாறும் வேண்டிக்கொண்டு;

68111

## சன்யாசிகள் நிலமை சற்றுருய்வாம்.

சன்னியாசிகள் தக்க பருவம் வந்தவுடன் ஒரு இடத்தில் தங்காது புழுப்போல் உழன்று திரிந்து காயமும் தானும் வேறெனவுணர்ந்து புலன்வழி மனத்தைச் செலுத்தாது தன்னுயுளைக்கழித்தல் வேண்டும்.

அதில் மூன்றுவிதச் சன்னியாசிகள் உண்டு:—ஞானசன்னியாசி, வேத சன்னியாசி, கரும சன்னியாசி என்பனவாம்.

1. ஞானசன்னியாசி=பஞ்சேந்திரியங்களினின்றும் விடுபட்டுத் தானே சிவமாக ஒழுகுபவன்.

2. வேத சன்னியாசி=இந்திரியங்களிடத்தில் நல்ல பயனையடையாது யோகம் செய்துகொண்டிருப்பவன்.

3. கரும சன்னியாசி=உள்ளத்தக்கினியை ஆன்மாவிலடக்கி மனதினுல் யாகம் செய்து சிவனைச் சதா நினைத்திருப்பவன்.

இவர்கள் வழிகளிலே சென்றுல் அனேக ஜீவன்கள் காலில் மிதிபட்டு இறந்துவிடும் என்று ஜீவகாருண்யம் மேற்கொண்டு மாரிக்காலமாகிய நாலு மாதத்திற்கும் ஓரேயிடத்தில் தங்கியிருந்து பிச்சை செய்து விதித்தனதொடுத்து விலக்கியனவிடுத்து காவியுடுத்து கழுத்துவரை சவரம் செய்துகொண்டு சிவச்சரிதமன்றி அவச்சரிதமாகிய பசுநூல்களை மனதில் மதியாது வெற்றுரைகள் விளம்பாது. தண்டுகமண்டலம் தாங்கி எக்காலத்தும் சிவனை நினைந்துகொண்டிருக்கவேண்டியவர்களல்லவா. இதனுலல்லவா கொல்லாமையாகிய பேரறம். பொய்யாமொழியார் துறவறவியலில் தூய்மையாய் மொழிந்தார். இப்படியிருக்க இப்போது அனேக போலிச் சன்னியாசிகள் மலிந்து உண்மை எது எனக் காணக்கூடாது செய்விப்பதும் தவிர தாங்கள் பொய் வேடத்தின் உரவினராகிய நான்குபேர்களையும் துணைக்கூட்டி பஞ்சமாபாதங்களை நெஞ்சினிலஞ்சாது செய்துவருகிறுர்கள். இவர்களிடமும் நாம் சுதந்திரம் பெற்றுக் கொள்ள வேண்டியது. அத்தியாவஸ்யம் என்று கூறிக்கொண்டு சன்

சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். இதிற் கண்ட குறைகளை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டுமாய் கேட்டுக் கொண்டு வந்தனம் செய்து என்றனிடத்தமர்கின்றேன்.

இப்படிக்கு,
கோழியார்,

நானும் அதை அவ்வண்ணமே ஆமோதிக்கிறேன்.

காடையார்.

சபையோர்களால் ஏகமனதாய் அங்கீகாரம் செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

---

# தலைவர் முடிப்புரை.

---

பெருமான்களே பெருமாட்டிகளே!

இதற்குமுன் பிரேரேபித்தும் ஆமோதித்ததுமாகிய ஒற்றுமை சுதந்திரம் என்ற விஷயங்களைப்பற்றி கபிலைப்பசுவாரும், செம்மறியாரும், வெள்ளாட்டாரும், கோழியாரும் முறையே பிர்மச்சத்திரிய வைசிய சூத்திர வருணத்தார்களிடமும், பிர்மச்சாரி கிருகஸ்தன் வானப்பிரஸ்தன், சன்யாசி என்ற ஆச்சிரமத்தார்களிடமும் சுந்திரம் பெறவேண்டியது அவசிய மென்றும் சாங்கோபசாங்கமாக மொழிந்தார்கள். அதைவிட அதிகம் என்ன சொல்லப்போகிறேன், ஆனால் முடிப்புரை சொல்லல் என்ற முறைபற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொண்டு இச்சபையை இனிது முடிக்கிறேன்.

இச்சங்கத்தைச் சார்ந்த பங்கமில்லாத் தங்கங்களே!

## "ஒற்றுமை"

நம்மவர்களில் ஒற்றுமை என்பது முற்றிலுமிருக்கவேண்டியதே உலகின்கண் ஒற்றுமையோடு கூடி வாழ்ந்தார்களானால் அவர்களுக்கு யாராலும் எவ்விதமான துன்பங்களும் ஒருக்காலும் சம்பவியாது. அதனால்தான் 'சேர்ந்து வாழ்ந்தார் சிறப்புற்றார். பிரிந்து வாழ்ந்தார் பீடற்றார்.' என்றும் சேர்ந்துவாழ்வதே சிறந்த வலிமையென்றும் ஒற்றுமையே ஜீவிய ஊற்று என்றும் பழமொழிகள் கூறுகின்றனவே.

உதாரணமாக, சுந்தோப சுந்தர்கள் தங்களுக்குள் ஒற்றுமை யுள்ள தாலல்லவா செயற்கரிய காரியங்களையும் செய்தார்கள் தங்களுக்குள் விகற்பம் வந்துழி இருவரும் போர்புரிந்து மாண்டொழிந்தார்கள்.

இன்பத்துளின்பம் பயக்குமிகலென்னுந்
துன்பத்துட்டுன்பங்கெடின். என்றார் வள்ளுவர்.

ஆகையால் நாம் ஒற்மையாய் இருந்து பெறற்கரியபேறு பெருவோமாகுக.

## சுதந்திரம்.

பெரியோர்களே! நான்கு வருணத்தார்களைப்பற்றி பகவத் கீதையில் 9-வது 23-வது சுலோகங்கூறுகிறதாவது:—

1. இந்திரியங்களையும் மனத்தையும். ஜெயித்தும் சுவாதீனம் செய்தும் பாமசாந்தியடைந்தவர்களே பிராமணர்களென்றும்.

2. இந்திரியங்களாலும் அவற்றிற்காசனுகிய மனத்தாலும் புண்ணிய பாவங்கள் உண்டாகிறதென்றெண்ணி அத்தோடு யுத்தம் செய்கிறவர்களே சத்திரியர்களென்றும்;

3. புண்ணிய பாவங்களைத் தெரிந்து புண்ணியத்தால் லாபமும் பாவத்தால் நஷ்டமும் உண்டு எனத் தெரிந்துகொள்ளும் நிலையை உடையவர்கள் வைசியர்கள் என்றும்;

4 யாதொன்றும் அரியாது அஞ்ஞானத்துடன் இருப்பவர்கள் சூத்திரர்கள் என்றும் கூறுகின்றது. அஃது நிற்க.

நான்கு வருணத்தார்களிடமும், நான்கு ஆச்சிரமிகளிடமும், சுதந்திரம் பெறவேண்டியது அவசியந்தான். உலகத்தில் எந்த உயிர்களும் உருளுரு சகடவாழ்க்கையின் இயற்கையுடையது. எந்த உயிரும் மரணத்திற்குப் பயந்து நடுங்கும் சுபாவமுடையது. எல்லா உயிர்களுக்கும் மரணவேதனையைவிட வேறு துன்பங்கிடையாது. ஆகையால் எந்தச் ஜீவன்களுக்கும் இன்பஞ் செய்தலே புண்ணியமென்றும், துன்பஞ் செய்தலே பாவமென்றும் பெரியார் கூறியிருக்கச் சில ஆறறிவுடைய மானிடவர்க்கத்தார்கள் நம்மையும், நாம்படும் மரணவேதனையையும் சிறிதும் கவனியாது நம்மவர்களைத் துடிதுடிக்கக் கொல்லுகிறார்களே, கொல்பவரைப் பார்த்துத் தடுக்காதிருக்கின்றார்களே இதைக் குறித்தன்றோ;

உண்ண ஊனை விரும்பி உயிர் கொலை
யெண்ணுவான் கொலை கண்டிரங்கான் கொலை
பண்ணுவானைத் தடுத்துப் பகர்கில்லா
னண்ணுவானிவரோ டெனுநால்வரும். என்றும்

கொல்லாவிரத குலமே குலமென்னு
நல்லார்களெல்லா நவின்றிருக்க—கொல்வாற்
றெரிசித்தாலும் பாவந்தீயன்முக நோக்கிப்
பரிசித்தாலும் பாவம்பார், என்றும்

அம்மாவென அலற ஆருயிரைக் கொன்றருந்தி
யிம்மானிடரெல்லா மின்புற்றிருக்கின்று
ரம்மாவெனுஞ் சத்தங்கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மா நிரையமென்றால் புசித்தவர்க் கென்சொல்லுவதே. என்றும்

பெரியார் கூறியிருக்கின்றார்களே. நிற்க, பக்ஷி மிருகங்களை நம் மாகாரத்திற்காகவே கடவுள் படைத்தார் எனச் சிலர் சொல்லும் சொல்லை ஓர்வாய். விதி, விலக்கு, மோக்கம், நரகம், புண்ணியம், பாவம், நல்வினை, தீவினை, சுகம், துக்கம், என்பனவற்றைத்தெரியும் ஆறறிவுடைய மானிட சரீரம் மேலானதே, மானிடர்களைப்போலவே மரண துன்பத்திற்குப் பயப்படும் இயற்கை எந்தச் ஜீவன்களிடத்திலும் உண்டு ஆகையால், அக்கொலையும் பாபமே. மானிடர்களின் உணவின் பொருட்டாகவே நம்மைக் கடவுள் படைத்திருப்பாரானால் யாதொரு உபயோகமுமில்லாத அதிகச் சிறிய கொசு எறும்பு புழு முதலியவற்றையும், பெரிய பிராணிகளாகிய புலி கரடி வேங்கை சிம்மம் முதலிய பிராணிகளை எதன்பொருட்டுப் படைத்தார். அவர் செய்கை பயனிலவே, கடவுள் ஞானமயமானவர் என்பது பொருந்தாதே ஆகையால் எந்தச் ஜீவன்களைக் கொன்று தின்றாலும் பாபம் என்பது தோன்றவில்லையா, சாதாரணமான நாய், கழுதை, குதிரை முதலிய ஜீவன்களையும் கடவுள் படைக்கவில்லையா அவைகளையும் ஆகாரத்திற்கானால் தின்னல்கூடுமே. இதனாலன்றோ

எவ்வுயிரும் பராபரன்றன் சன்னிதியதாகு
மிலங்கு முயிருடலனைத்துமீசன் கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போலென்று நோக்கி
யிரங்காது கொன்றருந்துமியல்பினோரை
வெளவ்வியமதூதருந் தண்டஞ்செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில்வார்த்து
வெவ்விய தீயெழுநாகில் வீழ்த்திமாறு
வேதனைசெய்திடுவரென விளம்புநூலே.

என்றுகூறி, கொலே மகாபாதகம் என்றல்லவா கொலேயைப் பஞ்சமா பாதகங்களில் முதன்மையாய் வைக்கப்பட்டது. கொலே செய்யாதவன் கொடுக்கும்படியான அன்னம் தேவாமிர்தமாகுமென்றும், செய்கிறவன் கொடுக்கும் அன்னம் விஷம் ஆகும் என்றும், புலேயன் வீட்டிற் புசித்தவன் எப்படிப் புலேயனுகின்றுனே அதுபோல கொலே செய்தவன் வீட்டிற் புசித்தவன் கொலேஞனுகின்றுன். ஆகையால் இவர்களுக்கு மேலான முக்திகிடையாது நரகவாதனேயே கிடைக்கும் என்றும் கூறுகின்றனவே,

ஆடு பன்றி கோழி அருந்துவோர்கட்கெல்லாம்
வீடில்லே என்றுரைக்கும் வேதங்க—ளுடுமெவர்க்
கிம்மையிலுந் துன்ப மறுமையிலுமேழ்நிறைய
நன்மையிலே யோரிடத்து நாடு. என்றும் சொல்லினர்.

கண்ணப்பரும் சிறுத்தொண்டரும் கடவுளுக்குக் கரியமுது படைக்கவில்லேயோ எனச்சிலகடையர்கள் கதறுகிருர்கள் அதைக்கவனிப்பாம்.

கண்ணப்பரும் சிறுத்தொண்டரும் கடவுளுக்குக்கரிய முது படைத்தது உண்மையே. கண்ணப்பர் கசிந்துருசிக்கண்ணேத் தோண்டியப்பி கண்ணப்பர் எனக்காரணப் பெயர் பெற்ருர்,

சிறுத்தொண்டரும் தன் சிறு மகவைச் சித்ரவதைசெய்து சிவனுக்களித்துச் சிவகதி பெற்ருர். அதைப்போல் இவர்களுக்கும் அன்பிருக்குமா? அவர்கள் திடபக்தியாலும் அன்பின் முதிர்ச்சியாலும் திரிகாணங்களும் ஒரு வழிச்சேரச் சிந்தை கரைந்து கடவுளிடத்தும் அவர் அடியார்களிடத்தும் செலுத்தும் மெய்யன்பே உருவாகி அவர்கள் தங்களே மறந்து இது செய்தால் பாபம் இது செய்தால் புண்ணியம் என்னும் தற்போதமற்றுச் செய்யும் செய்கை செயற்கரிய செய்கையே ஆகலின் அவர்கள் அன்பினுல் செய்யும் செயலனேத்தும் அறம் என்று கூறவில்லேயா.

அரனடிக்கன்பர் செய்பாபமுமறமதாகும்
பரனடிக்கன்பில்லாதார் புண்ணியம் பாபமாகும் என்றும்
அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கலன்பென்றும்
அவனுடைய அறிவெல்லா நமையறியுமறிவென்றும்
அவனுடைய செயலெல்லா நமக்கினியவாமென்றும்
அவனுடைய நிலேயில் வாரறி நீயென்றருள் செய்தார்.
என்ருர் சிவபிரான்.

கொன்றருந்தார் குற்றங்குணமே கொலைப்புலைஞர்
நன்றனைத்தும் தீயநவையாகும், என்றதட்டும்,

என்றார் பெரியார். ஆகையால் அவர்களுக்கும் சாமான்ய மானிடர்களுக்கும் ஒப்பிடுதல் அணுவுக்கும் மலைக்கும் உள்ள வித்தியாசமாகுமாகையால் அதைவிடுத்து மேலாராய்வாம்.

எங்கள் முன்னோர்கள் கையாண்டுவந்த பழக்கத்தை யொழித்துவிடுவதா எனக்கூறுவர் சிலர். முன்னோர்களைப் போலவே நீங்களும் ஒவ்வொன்றிலும் நடக்கப் பிரியப்படுவீர்களாகில் உங்கள் முன்னோர்கள் பரம ஏழைகளாகவோ, கூன் குருடு, செவிடு ஊமைகளாகவோ இருந்தால் நீங்களும் அப்படியாகிக்கொள்ளப்பட மாட்டீர்களல்லவா. அதுபோல முன்னோர்கள் தகாததைச் செய்துவந்தார்களானாலும் தகும் தகாதது தெரிந்த நீங்கள் தெரிந்தபின் தகாததைவிடவேண்டாமா, உதாரணமாக: இரணியன் சகலரையும் இரணியாய நம எனச்சொல்லச்செய்து அரசு செய்ய அவன் மகன் அது கூடாது ஹரிநம எனச் சொல்லவேண்டும் எனவாதிட்டு முன்னோர் செய்ததை நீக்கி தகப்பனையும் குற்றத்திற்குள்ளாக்கி மேற்கதியடைந்தானன்றோ.

தொன்மையவாமெனு மெவையு நன்றாகா இன்று
தோன்றியநூலெனுமெவையுந்தீதாகா. என்றார் பெரியார்.

அன்பர்களே இன்னும் சிலர் கொன்று தின்றால்தான் பாபமோ உலக்கை, உரல், அம்மி, அடுப்பு ஜலபாண்டம், துடைப்பம் முதலியவைகளால் பிரதிதினமும் எவ்வளவோ ஜீவன்கள் மாண்டு விடுகின்றன, அவைகள் ஆகாரத்திலும் சேர்ந்துவிடுகின்றன. அதனாற் பாபம் இல்லையோ எனக்கூறுவார் சிலர் பெரியோர்களே இதனாற் பாபம் உண்டென்பது உண்மையே ஆனால் அப்பாபங்கள் உடனுக்குடனே நீங்கிவிடுகின்றன. எப்படியெனில் பஞ்சயக்யம் செய்வதனால் நீங்கும் அதாவது, (1) பிரயக்யம்: வேத அத்தியயனம் செய்வது.

(2) பிதுர்யக்யம்: பிதுர்தேவதைகளுக்கு தர்பணம் செய்து திருப்தி செய்வது.

(3) தேவயக்யம்: அக்கினியில் ஓமம்செய்வது.

(4) பூதயக்யம். ஜிவன்களுக்கு ஆகாரம் கொடுப்பது.

(5) மனுஷயக்யம்: அதிதிகளுக்கு போஜனம் அளிப்பது இப்படிப்பட்ட மகாயக்யத்தால் பிரதிதினமும் செய்யும் பஞ்சசூனு தோஷங்கள் நீங்கிவிடும் எனக்கூறுகிறது கண்ட நீ பேஷணீ, சுல்லீ, உதகும்பீச, மார்ஜநீ, பஞ்சஸூனு க்ருகஹஸ்தஸ்ஸ தாபிஸ்வர்க்கம் நவிந்ததி என்ற தோஷங்கள், அப்போதைக்கப்போதே நிவர்த்தியாகிவிடுகிறது, ஆதலால் தோஷமில்லை. ஆகையால் எந்தச் சீவன்களையும் கொல்லாமலும், எந்தச் சீவன்களுக்கும் இம்சை செய்யாமலும் ஜீவகாருண்யச் செல்வர்களாகி நீடூழி வாழ்ந்து எம்பெருமான் திருவருளுக்குப் பாத்திரராகி பேரின்பப் பெருவாழ்வு வாழவேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனடியை இறைஞ்சி இச்சபையை இத்துடன் முடிக்கின்றேன்.

இச்சபை எக்காலத்தும் நடை பெற்று சுதந்திரம் அடைய அருள்புரியுமாறு உங்களை அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

ரிஷபன்,
சபைத்தலைவர்.

சாரங்கத்தார் எழுந்து பெரியோர்களே இதுவரை இச்சபையை சீராக நடத்தி புத்தி போதித்த அவைத்தலைவரவர்களுக்கு உங்களின் சார்பாக பெரிய வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இங்கு வந்து தங்கள் தங்கள் உபன்யாசங்களைச் செய்த பெரியோர்களுக்கும் சபையார் எல்லோருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

சாரங்கன்,
வரவேற்புக் கமிட்டித்தலைவர்.

உடனே தலைவர்களால் பிரதி வந்தனமுமியற்றப்பட்டு சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு கடவுள் பூசையும் வாழ்த்தும் நடத்தப்பட்டு சபை இனிது கலைந்தது. சுபம்! சுபம்!!

மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்களெங்கும் பரவுக வறங்களின்ப
நல்குக வுயிர்கட்கெலாம் நான்மறைச் சைவமோங்கி
புல்குக வுலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

முற்றிற்று.

PRINTED AT THE LITERARY SUN PRESS, COIMBATORE.

R4
N28
68111

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| I | 13 | மோக்ஷை | மோக்ஷ |
| III | 24 | யறிவாயத் | யறிவாய்த் |
| V | 21 | மோரார்ழி | மோராழி |
| ,, | 25 | தன்னோர்சொற் | தன் சொற் |
| VI | 18 | தொழுகுவேன் | தொழுகுவன் |
| VIII | 12 | பிறங்குவோமே | பிறங்குவோனே |
| 3 | 17 | ஆறறறி வுடைய | ஆறறிவுடைய |
| 4 | 11 | பகலன் | பகலவன் |
| 6 | 2 | செயிரியில் | செயிரில் |
| 7 | 33 | தோடு | தொடு |
| 11 | 26 | அந்தணார்கள் | அந்தணாளர்கள் |
| 12 | 1 | வென்றிவையாறு | லென்றிவையாறு |
| ,, | 29 | சான்றோர்க்கொன்றாக | சான்றோர்க்குக்கொன்றாகு |
| 13 | 14 | சுடுக்கட்டிற் | சுடுகாட்டிற் |
| 14 | 27 | முழவாவே | முழவாலே |
| 15 | 5 | தாரஸ்தீரிகள் | தாரஸ்த்ரீகள் |
| ,, | 25 | நல்லாரொடு | நல்லானொடு |
| 16 | 20 | ஆள் காவல | ஆன் காவல |
| 17 | 22 | மைமந்தாங் | மைந்தாங் |
| 19 | 12 | ஆசிரிதரோ | ஆசிரியரோ |
| ,, | 14 | வறதால் | வறத்தால் |
| 21 | 21 | மின்னி | வன்னமுலை |
| 22 | 20 | யேகாதேசி | வேகாதேசி |
| 24 | 10 | யழுபவே | யெழுபவே |
| ,, | 19 | ஒருயிர் | ஓருயிர் |
| ,, | 21 | மாதலற் | மாதலாற் |
| 29 | 1 | ஊணை | ஊனை |
| ,, | 5 | மென்னு | மென்று |
| ,, | 7 | றீயன் | தீயன் |
| 30 | 32 | நிலையில் | நிலையிவ் |
| 31 | 30 | ஜிவன் | ஜீவன் |
| 32 | 8 | ஜிவகாருண்யம் | ஜீவகாருண்யம் |

இப்புஸ்தகம்
வேண்டுவோர்
கீழ்கண்ட
விலாசதாரிடம்
பெற்றுக்கொள்ளலாம்:

இவ்வகைக் கோற்றக்கார் நன்மகா நாடகம் து
நூ ஆ கொலைமறுத்த லாபம்.

**R. N. K.**

1. R. N. கல்யாண
சுந்தரக்வுண்டர்
செட்டிபாளையம்
போத்தனூர் (மார்க்கம்)
2. கே. உச்சேகவுடர்
புஸ்தக வியாபாரம்
கோயமுத்தூர்.